## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>விலையில்லா கறவை மாடுகளால் 1.25 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி அதிகரிப்பு</u>**

**உத்தரமேரூர்:** தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் திட்டத்தால் மாநிலம் முழுவதும் 1.25 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது என கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னய்யா கூறினார்.
உத்தரமேரூர் கிழக்கு ஒன்றியம், புலிப்பாக்கம் கிராமத்தில் சனிக்கிழமை 50 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் டி.கே.எம்.சின்னய்யா கலந்துகொண்டு பயனாளிகளுக்கு விலையில்லா மாடுகள் வழங்கி பேசியது:

தமிழகம் முழுவதும் பள்ளிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட ரூ.17 ஆயிரம் கோடி ஒதுக்கி பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1,069 கோடியில் கால்நடை மருத்துவத்துக்காக கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. உத்தரமேரூர் தொகுதியில் மூன்று அரசு மருத்துவமனைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் திட்டத்தால் மாநிலம் முழுவதும் 1.25 லட்சம் லிட்டர் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது என்றார் அவர்.

விழாவில் பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை

உள்ளிட்டவை வழங்கப்பட்டன. உத்தரமேரூர் சட்டப்பேரவை உறுப்பினர் வாலாஜாபாத்பா.கணேசன், நகரத்தலைவர் ஆர்.கமலக்கண்ணன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

உத்தரமேரூர் வட்டாட்சியர் ரவி நன்றி கூறினார்.

**<u>சங்கரா பல்கலை.யில் மரக்கன்றுகள் நடும் விழா</u>**

**காஞ்சிபுரம்**:காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகத்தில் மரக்கன்றுகள் நடும் விழா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.
காஞ்சிபுரம் சங்கரா பல்கலைக்கழகத்தில் என்.எஸ்.எஸ். மற்றும் எல் அண்ட் டி நிறுவனம் சார்பில் பல்கலைக்கழக வளாகத்தில் மரக்கன்று நடும் விழா நடைபெற்றது.

பல்கலைக்கழக துணைவேந்தர் விஷ்ணுபோத்தி தலைமை வகித்தார்.

எல் அண்ட் டி துணைப் பொதுமேலாளர் உமேஷ் கண்ணா பங்கேற்று பல்கலைக்கழக வளாகத்தில் மரங்கன்றுகளை நட்டார்.

என்.எஸ்.எஸ். ஒருங்கிணைப்பாளர் சுந்தரராஜன், முத்துக்குமார், ஷியாம் மோகன் மற்றும் 300-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் இதில் கலந்துகொண்டனர்.

மாவட்டத்தில் ஏரிகள்**,** நீர்வரத்து கால்வாய்கள் ஆழப்படுத்த எதிர்பார்ப்பு

<u>திருவள்ளூர்:</u>
மழைக்காலம் வருவதற்கு முன்பே, திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகள் மற்றும் நீர்வரத்து கால்வாய்களை தூர்வாரி ஆழப்படுத்த வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்தது. இதனால் அனைத்து ஏரிகளும் வறண்டு காய்ந்து பாலைச் செடிகள், பார்த்தீனியச் செடிகள் என முளைத்து புதர்மண்டிக் கிடக்கிறது.

இதனால் விவசாயப் பயன்பாட்டுக்கும், குடிநீர்ப் பிரச்னைக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில், ஆயிரத்து 416 ஏரிகள் ஏரிகள் உள்ளன. இந்த ஏரிகளில் பாதி அளவு பொதுப்பணித் துறையின் கட்டுப்பாட்டிலும் (அதாவது 100 ஏக்கர் பரப்பளவுக்கு மேல் உள்ள ஏரிகள்), பாதியளவு ஒன்றிய நிர்வாகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளது.

பொதுப்பணித் துறை மற்றும் ஒன்றிய நிர்வாகத்தினர் ஆண்டுதோறும் ஏரி பராமரிப்புக்காக வந்த தொகையை முறையாகப் பயன்படுத்தாதால் இம்மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்கு இதுபோன்ற அவல நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கூறுகின்றனர். மேலும் தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மூலம் பல ஏரிகள் ஆழப்படுத்தப்படும் பணிகள் மேற்கொண்டதாக கூறப்பட்டாலும் தற்போது எந்த ஏரியிலும் நீர் தேங்கியபாடில்லை.

தமிழக அரசு வீடுகள்தோறும் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பை ஏற்படுத்தி நீரை சேமிக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறது.

ஆனால் மாவட்டத்தில் உள்ள ஏரிகளுக்காக அரசு நிதி ஒதுக்கியும் அந்த தேவை இதுவரை பூர்த்தி செய்யப்படாமல் உள்ளதால் மாவட்ட விவசாயிகள் பலர் அதிருப்தியில் உள்ளனர்.

அதேபோல் இம்மாவட்டத்தில் உள்ள 800-க்கும் மேற்பட்ட நீர் வரத்து கால்வாய்களை தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மூலம் தூர்வாரப்பட்டதாக திட்ட இயக்குநர் அலுவலகத்தினர் கூறுகின்றனர். ஆனால் பல நீர்வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்பில் உள்ளதாகவும், தூர்ந்து போயுள்ளதாகவும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இதனால் மழைக் காலங்களில் பெருக்கெடுத்து ஓடும் மழைநீர், வரத்துக் கால்வாய்கள் வழியாக சென்று ஏரி உள்ளிட்ட நீர்நிலைகளை அடைய முடியாமல் வீணாகிறது.

மேலும் ஆக்கிரமிப்புகள் காரணமாக நீர்வரத்து கால்வாய்களின் நீர்த் தேக்க பரப்பளவும் கணிசமான அளவு குறைந்துள்ளது.

இதனால் போதிய அளவு தண்ணீர் தேக்க முடிவதில்லை. இதையொட்டி பாசனத்துக்கு போதிய அளவு தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் சிரமப்படுகின்றனர்.

எனவே மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள், நீர்வரத்து கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும், தூர்வாரியும் மழைக் காலம் வரும் தண்ணீரை முறையாக சேமித்து விவசாய பயன்பாட்டுக்குவிட வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.

<u>**உரமாகப் பயன்படும் தக்கைப்பூண்டு சாகுபடி**</u>

**ராமநாதபுரம்**:திருப்புல்லாணி அருகே செடிகளைப் பயிரிட்டு ஆறடி உயரம் வரை வளர்த்து அதை உரமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையிலான தக்கைப்பூண்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.
ராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி அருகே பொக்கரனேந்தல் கிராமத்தில் வசிக்கும் விவசாயி சாத்தையா. இவருக்கு சொந்தமான ஒரு ஏக்கரில் பசுந்தாளுரப்பயிர் எனப்படும் தக்கைப்பூண்டு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இப்பயிரானது 6 அடி வரை நன்றாக வளர்ந்து பூப்பூத்தவுடன் அதை அந்த இடத்திலேயே மடக்கி உழுது அதையே உரமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். தக்கைப்பூண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலத்தில் அடுத்து சாகுபடி செய்வதற்காக போடப்படும் எந்த பயிருக்கும் ரசாயன உரம் போடத் தேவையில்லை. அதிகமான செலவும் இருக்காது.

திருப்புல்லாணி வேளாண்மை உதவி இயக்குநர் முகம்மது அப்துல் நசீர் மற்றும் வேளாண்மை தொழில் நுட்ப வல்லுநர்கள் மன்னா.ஏகாம்பரம், விஜயகுமார் ஆகியோர் அச்சாகுபடியை வியாழக்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து விவசாயி சாத்தையா கூறியது: ஒரு ஏக்கரில் தக்கைப்பூண்டு சாகுபடி செய்துள்ளோம். 45 நாள்கள் முதல் 70 நாள்களுக்குள் பூப்பூத்தவுடன் அதனை அப்படியே அந்த நிலத்திலேயே மடக்கி உழுது விடுவோம். இவ்வாறு செய்வதால் அடுத்து போடப்படும் எந்த பயிருக்கும் ரசாயன உரம் போடத் தேவையில்லை. செலவும் அதிகம் இருக்காது. மண்ணின் வளம் கெடாமல் பாதுகாக்கப்படும். இந்த தக்கைப்பூண்டு செடிகள் உரமாக மாறி மண்ணின் தன்மையை அதிகரிக்கும். அரசு ஒரு கிலோ விதை ரூ.40 வீதம் மானியத்தில் வழங்கியுள்ளது. நாங்கள் ரூ.800 மதிப்புள்ள 20 கிலோ விதைகளை இலவசமாக வாங்கி பயிரிட்டுள்ளோம். முக்கியமாக அடுத்து போடப்படும் பயிருக்கு தழைச்சத்து கிடைத்து விடுவதுடன் பூச்சி தாக்குதலே இருக்காது என்பதும் குறிப்பிடத் தக்கது. ஒரு மூட்டை ரசாயன உரம் ரூ.1500 வரை வாங்க வேண்டிய இந்தக்காலத்தில் இது போன்ற தொழில் நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்தி மண்ணின் வளத்தை பாதுகாப்பதுடன் நல்ல மகசூலையும் பெறலாம் என்றார்.

<u>நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்க அரசு மானியம்</u>

**மதுரை:**தமிழக அரசின் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ், கறிக்கோழி, முட்டைக் கோழி, நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்க விருப்பமுள்ளவர்களுக்கு, கொட்டகைகள் அமைப்பதற்கு செலவிடப்படும் தொகையில் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும் என , மாவட்ட ஆட்சியர் எல். சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பது:

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 33 சதவீதம் மானியம் வழங்கப்படும். மேலும், நாட்டுக் கோழிகளை ஆண்டு முழுவதும் விவசாயிகள் வளர்க்க ஊக்கப்படுத்தும் பொருட்டு, 2ஆம் தொகுப்பு கோழிக் குஞ்சுகள் வாங்கும் செலவில் தமிழக அரசு சார்பில் 50 சதவீதம் ஊக்கத்தொகை 3,125 ரூபாயும், 3ஆம் தொகுப்பு கோழிக் குஞ்சுகளை வாங்கும் செலவில் 30 சதவீதம் ஊக்கத்தொகை 1,875 ரூபாயும் வழங்கப்படும்.

கோழிகள் 250 முதல் 500 வரை எண்ணிக்கை கொண்ட நாட்டுக் கோழிப் பண்ணைகள் அமைக்கவும் மேற்படி மானியம் அளிக்கப்படும். இத்திட்டத்தின் விவசாயிகள் மற்றும் தனிநபர் தொழில்முனைவோர், சுயஉதவிக் குழுக்கள் ஆகியோர் தேர்வு செய்யப்பட தகுதியானவர்கள். இவர்களிடம் கோழிப் பண்ணை அமைக்க போதிய நிலம், தங்கள் பெயரிலோ அல்லது குடும்ப உறுப்பினர் பெயரிலோ இருத்தல் அவசியம். கோழி வளர்ப்பில் முன்அனுபவம் உள்ளவர்களும், ஏற்கெனவே கொட்டகை அமைத்துள்ள பயனாளிகள் புதிய கொட்டகை அமைத்துக் கொள்ளவும், கோழிப் பண்ணையை விரிவாக்கம் செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளும், இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு, தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் கீழ், பயிற்சி மையங்களில் 5 நாள்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும். மேற்கூறிய தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்பாளரின் கடிதத்துடன், அரசுடைமையாக்கப்பட்ட வங்கியிலிருந்து கடன் வழங்கும் ஒ ப்புதல் கடிதம் அல்லது சொந்த நிதிக்கானச் சான்றுடன் விண்ணப்பங்களை, மதுரை மற்றும் திருமங்கலம் கோட்டத்தைச் சார்ந்த கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்களிடம் அளிக்க வேண்டும், என  தெரிவித்துள்ளார்.

## மழைநீர் சேகரிப்புத் திட்டம்:பேரூராட்சி பகுதியில் **90** சதவீதம் நிறைவு

**திண்டுக்கல்:**திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பேரூராட்சிப் பகுதியில், மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணிகள் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளதாக பேரூராட்சிகள் உதவி இயக்குநர் ம . ராஜேந்திரன் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள குடியிருப்புகள், அலுவலகங்கள், ம ருத்துவமனைகள் என  அனைத்து விதமான கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என  மாவட்ட நிர்வாகம் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. இதனை அடுத்து ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகராட்சி பகுதிகளில் உள்ள குடியிருப்புகளில், மழைநீர் சேகரிப்பு

அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது குறித்து அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பேரூராட்சி பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைக்கும் பணிகள் சுமார் 90 சதவீதம் நிறைவடைந்து விட்டதாக தெரிய வந்துள்ளது. இதுகுறித்து பேரூராட்சிகள் உதவி இயக்குநர் ம . ராஜேந்திரன் தெரிவித்தது:

மாவட்டத்தில் அய்யலூர், வடமதுரை, எரியோடு, பாளையம் என மொத்தம் 23 பேரூராட்சிகள் உள்ளன. இந்த பேரூராட்சிகளின் கட்டுப்பாட்டில் மொத்தம் 1,06,231 குடியிருப்புகள் உள்ளதாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது வரை 92 ஆயிரம் குடியிருப்புகளுக்கு மேல் மழைநீர் சேகரிப்பு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சி பகுதியில் வீடுகள் கட்ட ஒப்புதல் வாங்க வருவோரிடம், அந்த வரைபடத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு மற்றும் கழிப்பறை வசதிக்கான திட்டம் இருந்தால் மட்டுமே அனுமதி அளிக்கப்படுகிறது. கட்டடம் கட்டப்பட்ட பின், வீட்டு வரி செலுத்த வரும்போது, மழைநீர் சேகரிப்பு மற்றும் கழிப்பறை கட்டியதற்கான வரைபடங்கள் இருந்தால் மட்டுமே ரசீது வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பேரூராட்சி பகுதிகளில், 90 சதவீத குடியிருப்புகளில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை விரைவாக உருவாக்க முடிந்தது என்றார் அவர்.

## சாரல் மழை: மேகமலை நீர் வீழ்ச்சியில் நீர் வரத்து

மலைப்பகுதியில் சாரல் மழை பெய்து வருவதால், மேகமலை நீர் வீழ்ச்சியில் கடந்த சில தினங்களாக நீர்வரத்து ஏற்பட்டுள்ளது.

தேனி மாவட்டம், கடமலைக்குண்டு அருகே மேகமலை நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. மேகமலை பகுதியில் பெய்யும் மழையால் அப்பகுதிகளில் உள்ள ஓடைகளில் நீர்வரத்து ஏற்பட்டு, மலைகளில் உள்ள பல்வேறு மூலிகைகள் கலந்து வருவதால் இந்த அருவி மூலிகைகளின் அருவி என்றும் அழைக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களாக மேகமலை மற்றும் கோம்பைத் தொழு மலைப்பகுதியில் மழை இல்லாததால் அருவியில் நீர்வரத்தின்றி வறண்டு காணப்பட்டது. இந்நிலையில் கடந்த சில தினங்களாக இப்பகுதியில் சாரல் மழை பெய்து வருவதால் மேகமலை அருவியில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மேலும் மேகமலை நீர்வீழ்ச்சி பகுதியில் மது அருந்திவிட்டு தொல்லை கொடுப்பவர்கள் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நீர்வரத்து காலங்களில் நீர்வீழ்ச்சியில் போலீஸ் பாதுகாப்பு போடவேண்டும்.

அருவியின் மேல்பகுதியில் இருந்து சுற்றுப்புற கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதால் மேல் பகுதிக்கு சுற்றுலாப்பயணிகள் செல்ல தடைவிதிக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**ஊட்டி தேயிலை விற்பனை நியாயவிலைக்கடை பணியாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம்**

**சிவகங்கை:**ஊட்டி தேயிலை விற்பனை செய்வது குறித்து நியாய விலைக்கடை பணியாளர்களுடன் கலந்தாய்வுக்கூட்டம் சிவகங்கை கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.
இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் வே. ராஜாராமன் தலைமைவகித்துப் பேசுகையில், அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மண்ணெண்ணெய், சீனி விற்பனை செய்தாலும் தமிழக முதல்வர் ஏழை, எளியோருக்கு தரமான டீத்தூள் வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் ஊட்டி தேயிலை நியாய விலைக்கடைகளில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார். இத்தேயிலை விற்பனையை அதிகரிப்பதன் மூலம் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விற்கு வளம் சேர்ப்பதாக அமையும் என்றார்.

கூட்டத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் கே.கே. உமாதேவன் முன்னிலை வகித்தார். கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரின்

நேர்முக உதவியாளர் சுகுமார், களப்பணியாளர்கள், நியாய விலைக்கடைப் பணியாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## வன உயிரினங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

**திருப்பூர்:** வன உயிரினங்களின் முக்கியத்துவம் குறித்த துண்டுப் பிரசுரங்களை திருப்பூர் இயற்கை கழகத்தினர் மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை விநியோகித்தனர். பழைய பேருந்து நிலையம், பூக்கடை பகுதி, தென்னம்பாளையம் சந்தைப் பகுதியில் திருப்பூர் இயற்கை கழகத்தின் தலைவர் செந்தில்ராஜன், செயலாளர் ரவீந்திரன் பொருளாளர் மெய்ஞானமூர்த்தி உள்ளிட்டோர் இந்தத் துண்டு பிரசுரங்களை விநியோகம் செய்தனர்.

திருப்பூர் மாநகர் முழுவதும் வாரந்தோறும் ஒவ்வொரு பகுதியிலும், இதுகுறித்த விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் பொதுமக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட இருப்பதாக இயற்கை கழகத்தின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## பருத்தி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

**தாராபுரம்:** மூலனூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் பருத்தி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
இந்த விற்பனைக் கூடத்திற்கு கரூர், மணப்பாறை, வையம்பட்டி, பழனி, தாராபுரம், ஒட்டன்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விவசாயிகள் 2,600 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

கோவை, அவிநாசி, பொள்ளாச்சி, புளியம்பட்டி, அன்னூர், சூலூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஏலத்தில் பங்கேற்க வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலத்தில் ஆர்.சி.எச். ரக பருத்தி குவிண்டால் ரூ. 4,700 முதல் ரூ. 6,000 வரை, மொத்தம் ரூ.

49 லட்சத்திற்கு விற்பனையானது.

இதுகுறித்து, விற்பனைக் கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் கூறியது: ஏலத்தில் அதிகளவு வியாபாரிகள் பங்கேற்றதால் பருத்தி குவிண்டாலுக்கு ரூ. 300 வரை கூடுதல் விலை கிடைத்துள்ளது. தற்போது பருத்தி வரத்து குறைந்து வருவதால் தொடர்ந்து விலை உயரும் வாய்ப்பு உள்ளது என்றார்.

## வேளாண் ஆய்வக உதவியாளர்கள் சங்க மாநில பொதுக்குழுக் கூட்டம்

**ஈரோடு:** ஈரோட்டில் தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை ஆய்வக உதவியாளர்கள் சங்க மாநில செயற்குழு மற்றும் பொதுக்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது .
இக் கூட்டத்தில், ஆய்வக உதவியாளர்கள் வயது மூப்பு காரணமாக மிகக் குறைந்த காலத்திற்குள் பணி ஓய்வு பெறும் நிலை உள்ளது. இதனால், வேளாண்மை உதவி அலுவலர் பதவி உயர்வை விரைந்து வழங்க வேண்டும். உதவி வேளாண்மை அலுவலர்களுக்கு இணையாக ஆய்வக உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க உத்தரவிட்ட முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வது என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநிலத் தலைவர் மோகன்தாஸ், மாநில பொதுச் செயலாளர் மோகன், துணைத் தலைவர் ஆறுமுகம், துணைச் செயலாளர் பழனிசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## **இலவசமாக மரக்கன்றுகள் பெற ஈரோடு ஆட்சியர் அழைப்பு**

**ஈரோடு:** மரக்கன்று வளர்க்க விரும்புவோர், வனத்துறை அலுவலகத்தில் இலவசமாக மரக்கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என , ஆட்சியர் வே.க .சண்முகம் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து, அவர் வெள்ளிக்கிழமை விடுத்த செய்தி:

உலக  வெப்பமயமாதலை தடுக்கும் நோக்கில் வனங்களுக்கு வெளியே

மரக்கன்றுகளை நட்டு வளர்க்கும் வகையில் தமிழகம் முழுவதும் கடந்த ஆண்டு பெருந்திரள் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு உத்தரவிட்டது.

அதன்படி, வனத்துறை மூலமாக தமிழகம் முழுவதும் 66 லட்சம் மரக்கன்றுகள் நட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஈரோடு மாவட்டத்தில் வனங்களுக்கு வெளியே உள்ள பசுமை பரப்பை அதிகப்படுத்தும் வகையில், 2 லட்சத்து 6 ஆயிரத்து 250 மரக்கன்றுகள் நட அரசு உத்தரவிட்டுள்ளது.

கடந்த பிப்.24-ஆம் தேதிமுதல் இதற்கான நடவுப் பணி மேற்கொள்ளப்படுகிறது. அரசு வளாகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தனியார் நிறுவன வளாகங்கள், தொழில் நிறுவனங்களுக்கு குறைந்தபட்சம் 50 செடிகள் வழங்கப்படவுள்ளன. மரக்கன்றுகள் பெற விருப்பமுள்ளவர்கள், ஈரோடு வனத் துறை அலுவலகத்தை 0424-229 1722, சத்தியமங்கலம் 04295-220 312, ஆசனூர் 04295-223 512, கோபி அலுவலகத்தை 04285-228 404 ஆகிய தொலைபேசி எண்களிலும், பங்களாப்புதூர் வனச்சரக அலுவலரை 99423-84936 என்ற செல்ஃபோன் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கக் கோரிக்கை**

**ஈரோடு:** பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.
இச் சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் ஈரோட்டில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு சங்கத் தலைவர் செ.நல்லசாமி தலைமை வகித்தார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

பவானிசாகர் அணையில் இருந்து குடிநீருக்காக திறக்கப்பட்டுள்ள நீரை ஆலைகள் பயன்படுத்த தடை விதிக்க வேண்டும். கழிவுநீரை ஆற்றில் நேரடியாகக் கலக்கும் ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாண்டியாறு, புன்னம்புழா

திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். கீழ்பவானி பாசனப் பகுதிகளில் காய்ந்துபோன தென்னை மரங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். பால் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு ரூ.30 ஆகவும், எருமைப்பாலுக்கு ரூ.40 ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டும். கர்நாடகத்தை போல, ஒரு லிட்டர் பாலுக்கு ரூ.5 மானியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கத்தின் திருப்பூர் மாவட்டச் செயலாளர்கள் விஸ்வநாதன், சுந்தரமூர்த்தி, துரைசாமி, ஈரோடு மாவட்டச் செயலாளர்கள் கோபிநாத், தங்கராசு, பழனிசாமி, மக்கள் மன்ற அமைப்பாளர் செல்லப்பன், ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் ஈ .வி.கே.சண்முகன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**நீலகிரியில் பருவமழை வலுக்காததால் வறண்ட அணைகள்**

**உதகை:** நீலகிரி மாவட்டத்தில் உதகை மற்றும் சுற்றுப்பகுதிகளில் தென்மேற்கு பருவமழை இன்னமும் வலுக்காததால், முக்கிய அணைகள் வறண்டே காணப்படுகின்றன.
நீலகிரி மாவட்டத்தில் வழக்கமாக ஜூன் மாதத்திலேயே பருவமழை தொடங்கிவிடும். இவ்வாண்டில் மே மாத இறுதியிலேயே பருவமழை தொடங்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், தொடர்ந்து சில நாள்களுக்கு பரவலாக மழை பெய்வதும், பின்னர் மழையில்லாமல் வறண்ட வானிலையே நிலவியது.

இருப்பினும் நீலகிரி மாவட்டத்தில் கேரள மாநிலத்தையொட்டியுள்ள பகுதிகளான கூடலூர், பந்தலூர் பகுதிகளில் பரவலாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. அதேபோல , உதகையின் முக்கிய நீர்ப்பிடிப்பு பகுதிகளான வெஸ்டர்ன் கேட்ச்மென்ட், அப்பர்பவானி, அவலாஞ்சி, எமரால்டு பகுதிகளிலும் பரவலான மழைப்பொழிவு இருந்தது.

மே மாதத்தில் இல்லாவிட்டாலும், ஜூன் மாதத்தில் வலுக்க வேண்டிய பருவமழை தொடர்ந்து போக்குகாட்டியே வந்ததால், விவசாயிகள் பெரும் ஏமாற்றமடைந்தனர். அடுத்த போகத்திற்கான சாகுபடியை தொடர வேண்டுமா இல்லையா என்பதைக்கூட தீர்மானிக்க முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

இதற்கிடையே ஜூன் மாதமும் முடிந்து ஜூலை மாதம் தொடங்கிய பின்னரும்கூட பருவமழை வலுக்காததால் அனைத்து தரப்பினரும் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

விவசாயம் மட்டுமின்றி குடிநீர் விநியோகமும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந் நிலையில், கடந்த 3 நாள்களாக கூடலூர், பந்தலூர் பகுதிகளில் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, மாயாறு உள்ளிட்ட ஆற்றுப் பகுதிகளுக்கு நீர்வரத்தும் அதிகரித்துள்ளது.

இதைத் தொடர்ந்து, உதகை மற்றும் சுற்றுப்பகுதிகளிலும் கடந்த 2 நாள்களாக நல்ல மழை பெய்து வருகிறது. ஆனால், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்யும் மழை பலத்த மழையாக இல்லாமல் தூறல் மழையாகவே உள்ளதால், நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறிப்பிட்ட அளவுக்கும் குறைவாகவே உள்ளது.

உதகை மற்றும் சுற்றுப் பகுதிகளில் பலத்த காற்று வீசுவதால், மரங்கள் வேரோடு சாயும் அபாயமேற்பட்டுள்ளது. பலத்த காற்றின் காரணமாக கடும் குளிரும் நிலவுகிறது. வனப் பகுதிகளுக்குள் ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. உதகை-மஞ்சூர் சாலையில் லவ்டேல் அருகே சாலையின் குறுக்கே விழுந்த மரத்தால், அப் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு போக்குவரத்து பாதிக்கப்பட்டது. அபாயகரமான மரங்களை அகற்றுவது குறித்து பேரிடர் மேலாண்மை மற்றும் மீட்புக் குழுவினர் உதகையில் முகாமிட்டு ஆய்வு நடத்துகின்றனர்.

இந் நிலையில், உதகையின் இரட்டை நீர்த்தேக்கங்கள் என அழைக்கப்படும் அவலாஞ்சி, எமரால்டு நீர்த்தேக்கப் பகுதியில் போதிய அளவில் மழையில்லாததால் இந்த இரு நீர்த்தேக்கங்களிலும் குறைந்த அளவே தண்ணீர் இருப்பு உள்ளது. இதன் காரணமாக, இவ் விரு நீர்த்தேக்கங்களையும் இணைக்கும்

இணைப்பு பாலம் பகுதியில் தற்போது ஒரு சொட்டு கூட தண்ணீரின்றி வறண்டு காணப்படுகிறது.

இதே நிலை தொடர்ந்தால், பருவமழை பொய்த்து விவசாயம் பாதிக்கப்படுவதோடு, குடிநீருக்கும், நீர்மின் உற்பத்திக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் என  இப் பகுதி மக்கள் கூறுகின்றனர். வருண பகவான்தான் கருணை காட்ட வேண்டும்.

**ஓவேலி பகுதியில் தொடரும் வனஅழிப்பு**

**கூடலூர்:** ஓவேலி வனப் பகுதியில் புதிய ஆக்கிரமிப்புகள் தொடர்கின்றன. கூடலூர் வனச் சரகத்தில் உள்ள கடந்த ஒரு ஆண்டுக்கு முன் தமிழக அரசு ஓவேலிப் பகுதியிலுள்ள 12 ஆயிரத்து 500 ஏக்கர் வனப்பரப்பை தனி வனச் சரகமாக தமிழக அரசு அறிவித்தது. இந் நிலையில், அப் பகுதியில் உள்ள கொத்தலங்காடு, சீபுரம், பெரியசோலை, எல்லமலை போன்ற இடங்களிலுள்ள புல்மேடுகள், சோலை வனங்கள் உள்பட மழைக் காடுகளை அழித்து புதிதாக விவசாயம் செய்ய ஆரம்பித்துள்ளனர். இப் பகுதிதான் தென்னிந்தியாவுக்கான முக்கிய நீர் ஆதாரமாக இருப்பதால், ஓவேலியை தென்னகத்தின் நீர்த்தொட்டி என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் அழைப்பது வழக்கம்.

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நீலகிரி உயிர்ச்சூழல் மண்டலத்தின் மையப்பகுதியில் ஓவேலி அமைந்து இருப்பதால், இங்கு பல   அரிய வகை விலங்குகளும், தாவரங்களுக்கும் உள்ளன.

பருவ மழை துவங்கியவுடன் வனத்தை அழித்து புதிதாக நாற்றுகள் நடும்பணி நடைபெறுகிறது. வனத் துறையில் உள்ளவர்களின் ஒத்துழைப்போடுதான் ஆக்கிரமிப்பு பணிகள் நடைபெறுவதாக சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

ஆக்கிரமிப்பு நடைபெறுவதாக கிடைத்த தகவலையடுத்து, மாவட்ட வன அலுவலர் தேஜஸ்வி அப் பகுதியில் ஆய்வு செய்துவருகிறார். வன நிலங்களை

ஆக்கிரமிக்கப்பட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என  எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**<u>மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி</u>**

**அரூர்:** பாப்பிரெட்டிப்பட்டியில் இ.ஆர்.கே. மகளிர் கலை, அறிவியல் கல்லூரி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி அண்மையில் நடைபெற்றது. பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கிய இந்தப் பேரணிக்கு இ.ஆர்.கே. கல்வி நிறுவனத் தாளாளர் இ.ஆர்.செல்வராஜ் தலைமை வகித்தார். பேரணியை வட்டாட்சியர் எம்.ரவிச்சந்திரன் தொடக்கிவைத்தார் .

வீடுகள், அடுக்குமாடிக் கட்டடங்கள், ஏரி, குளம், குட்டைகள் உள்ளிட்ட நீர்நிலைகளில் மழைநீரை சேகரிப்பது, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மரம் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு அட்டைகளை ஏந்தியவாறு கல்லூரி மாணவிகள் பேரணி சென்றனர். பாப்பிரெட்டிப்பட்டி நகரின் முக்கிய வீதிகள் வழியாகச் சென்ற இந்த விழிப்புணர்வுப் பேரணி வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரே நிறைவடைந்தது.

காவல் ஆய்வாளர் முத்துக்கிருஷ்ணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராமநாதன், வ .சந்திரசேகரன், இ.ஆர்.கே. கல்லூரி முதல்வர் பெ.மாது, துணை முதல்வர் டி.சக்தி, நிர்வாக அலுவலர் சொ.அருள்குமார், ஒருங்கிணைப்பாளர் கோ.புவனேஸ்வரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**<u>மேட்டூர் அணை உபரிநீரைப் பாதுகாக்க இணைப்புக் கால்வாய் திட்டம்</u>**

**நாமக்கல்:** மேட்டூர் அணையின் உபரிநீரை நாமக்கல் மாவட்டம் வழியாகத் திருப்பிவிட்டு பாதுகாக்க காவிரி, சரபங்கா, திருமணிமுத்தாறு இணைப்புக் கால்வாய் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று, நாமக்கல் மாவட்ட பாஜக வலியுறுத்தியுள்ளது.
அந்தக் கட்சியின் நாமக்கல் மாவட்ட நிர்வாகிகள் செயற்குழுக் கூட்டம் பள்ளிப்பாளையத்தில் அண்மையில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் சிவகாமிபரமசிவம் தலைமை வகித்து தொடக்கிவைத்தார்.

இதில், மத்திய அரசின் நிதிநிலை அறிக்கைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வரும் தேசிய ஊரக வேலையுறுதித் திட்டத்தை மாவட்ட நிர்வாகம் கூடுதல் கவனம் செலுத்தி கண்காணிக்க வேண்டும். காவிரி ஆற்றையும், திருமணி முத்தாறையும் இணைத்து மேட்டூர் அணையின் உபரிநீரை அதன் வழியாகத் திருப்பிவிட்டு நாமக்கல் மாவட்டத்தை வறட்சியிலிருந்து மீட்டெடுக்க வேண்டும்.

நாமக்கல், ராசிபுரம், திருச்செங்கோடு நகரங்களில் விரைவில் சுற்றுச்சாலை அமைக்க வேண்டும். நாமக்கல் மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்களை பணியமர்த்துவதுடன் மருத்துவ வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும். தனியார் பேருந்துகளில் காற்று ஒலிப்பான்களை நிரந்தரமாக அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட நிர்வாகிகள் கார்த்திகேயன், சம்பத்குமார், மகளிரணி நிர்வாகி சரஸ்வதி, நகரத் தலைவர் மாதேஸ்வரன், பொருளாளர் வெங்கடேசன், வணிகப் பிரிவு நிர்வாகி வழக்குரைஞர் பழனிச்சாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**<u>ரூ. 80 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை</u>**

**திருச்செங்கோடு:** திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 80 லட்சத்துக்கு மஞ்சள் சனிக்கிழமை விற்பனையானது. இந்த விற்பனை சங்கத்துக்கு ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து 1,800 மஞ்சள் மூட்டைகளை விவசாயிகள்

விற்பனைக்கு கொண்டுவந்தனர்.

இந்த மஞ்சளைக் கொள்முதல் செய்வதற்கு ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய பகுதிகளிலிருந்து 35-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்தனர்.

இதில், விரலி ஒரு குவிண்டால் ரூ 6,539 முதல் 7,009 வரையும், கிழங்கு ரகம் ரூ 5,993 முதல் ரூ 6,389 வரையும், பனங்காளி ரகம், ரூ. 9,800 முதல் 13,699 வரையும் ஏலம் போனது.

ஈரோடு மஞ்சள் சந்தையை விட குவிண்டாலுக்கு ரூ. 500 அதிகமாக கிடைத்ததால்

விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

மொத்தம் 1,800 மஞ்சள் மூடைகள் ரூ. 80 ல ட்சத்துக்கு ஏலம் போனதாக கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மேலாண் இயக்குநர் லோகநாதன் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

## மிளகு சாகுபடி விவசாயிகள் உரமிட அறிவுறுத்தல்

**நாமக்கல்:** கொல்லிமலை வட்டாரத்தில் தற்போது மழை பெய்து வருவதால், மிளகுச் செடிகளுக்கு உரமிட வேண்டும் என , தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் மோகன் விஜயகுமார் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கொல்லிமலை வட்டாரத்தில் சுமார் 800 ஏக்கர் பரப்பில் மிளகு சாகுபடி செய்யப்படுகின்றன. தற்போது நல்ல மழை பெய்து வரும் நிலையில் மிளகுச் செடிகளுக்கு உரமிட வேண்டும். காய்த்துக் கொண்டுள்ள மிளகுப் பயிருக்கு 10 கிலோ தொழு உரமிட வேண்டும். ஒரு செடிக்கு 220 கிராம் யூரியா, 250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 240 கிராம் முரியேட் ஆஃப் பொட்டாஸ் ஆகியவற்றை ஓர் ஆண்டுக்கு இட வேண்டும்.

இந்த உரத்தை இரண்டாகப் பிரித்து ஒரு பாதியை ஜூலை மாதத்திலும், மற்றொரு பாதியை அக்டோபர் மாதத்திலும் இட வேண்டும். செடியின் அடிப்பாகத்திலிருந்து ஒரு அடி தள்ளி உரத்தை இட்டு மண் அணைக்க வேண்டும். பின்னர் ஒரு மாதம் கழித்து ஒரு செடிக்கு 100 கடிராம் அப்ஸாஸ் பைரில்லத்தை மக்கியத் தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும்.

இதன் மூலம் 20 முதல் 30 சதம் வரை கூடுதல் மகசூலைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>கிருஷ்ணகிரி அணையில் தண்ணீர் திறப்பு</u>

**ஒசூர்:**கிருஷ்ணகிரி அணையிலிருந்து வலது, இடதுபுற பிரதானக் கால்வாய்களில் இருந்து முதல் போக பாசனத்துக்காக சனிக்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவைத்து மாநில உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் பேசியது:

தமிழக முதல்வர் உத்தரவின்படி, கிருஷ்ணகிரி அணையிலிருந்து முதல் போகப் பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

டிசம்பர் 9-ஆம் தேதி வரை தொடர்ந்து 150 நாள்கள் தண்ணீர் திறந்து விடப்படும்.

வலதுபுற கால்வாயிலிருந்து 75 கன  அடி வீதமும், இடதுபுற கால்வாயிலிருந்து 80 கன  அடி தண்ணீரும் திறந்து விடப்படும்.

இதன்மூலம் கிருஷ்ணகிரி வட்டத்தில் பெரியமுத்தூர், சுண்டேகுப்பம், திம்மாபுரம், தளிஅள்ளி, காவேரிப்பட்டணம், குண்டலப்பட்டி, எர்ரஅள்ளி, மாரிசெட்டிஅள்ளி, பையூர் உள்ளிட்ட 16 ஊராட்சிகளில் உள்ள விவசாயிகள் பயன் பெறுவர்.

அணையின் நீர்மட்டம் தற்போது 45.70 அடியாக உள்ளது. விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும என்றார் அவர்.

நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியன், அசோக்குமார் எம்.பி., எம்எல்ஏக்கள் கே.பி. முனுசாமி, மனோரஞ்சிதம் நாகராஜ், கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**<u>விவசாயத் தொழிலாளர்கள் சங்கக் கூட்டம்</u>**

**போச்சம்பள்ளி:** கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி அருகேயுள்ள நாகரசம்பட்டியில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்கள் சங்கக் (சிபிஐ) கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
அங்குள்ள மாரியம்மன் கோயில் வளாகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு சங்கத்தின் வட்டச் செயலர் எ .சுப்பிரமணி தலைமை வகித்தார்.

பழங்குடி மக்கள் சங்க மாநிலச் செயலாளர் எ .கெம்பன் கொடியேற்றினார்.

பகுதிச் செயலர் சக்கரவர்த்தி, நகரச் செயலாளர் ராமமூர்த்தி, ஒன்றியச் செயலர் ரமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் அரூர் தொகுதி முன்னாள் எம்எல்ஏவும், சங்கத்தின் மாவட்டச் செயலாருமான வே.கிருஷ்ணமூர்த்தி கூட்டத்தைத் தொடக்கிவைத்துப் பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலாளர் நஞ்சப்பன், எ .கிருஷ்ணப்பா, கண்ணு, வெங்கடாசலம், லலிதா, நரசிம்மன், சி.செல்வம் சின்னராஜ், தேவராசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

வேலை உறுதித் திட்டத்தில் நாளொன்றுக்கு ரூ. 300 கூலி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தப்பட்டன.

**<u>மரக்கன்று நடும் விழா</u>**

**அரியலூர்:**
ஜயங்கொண்டம் அருகே த . பொட்டக்கொல்லையில் மரக்கன்று நடும் விழா அண்மையில் நடைபெற்றது.

அரியலூர் அறிவுச்செல்வன் கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை சார்பில் ஜயங்கொண்டம் அருகே உள்ள தத்தனூர் பொட்டக்கொல்லை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மரக்கன்றுகள் நடும் விழா ஆசிரியர் பா. இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. இதில் மருத்துவர் ஜெயந்தி, அறிவுச்செல்வனின்

தந்தை ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் சி. தமிழ்மணி, கமலம் தமிழ்மணி, காவல் துறை உதவி ஆய்வாளர் த . சாமிதுரை, தமிழரசி, அதிமுக பொறுப்பாளர் செ. விசுவநாதன், மாவட்டச் சுற்றுச்சூழல் அமைப்பாளர் அறிவழகன், மீ.அ. அபராஜிதவர்மன், மீ.அ. ஆளவந்தான், வாலாஜாநகரம் அலெக்சாண்டர் உள்ளிட்டோர் மரக்கன்றுகளை நட்டனர். ஏராளமானோருக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. அன்னதானமும் வழங்கப்பட்டது.

வெ. பொன்னுசாமி வரவேற்றார். காவல்துறை ஆய்வாளர் சாமிதுரை நன்றி கூறினார்.

**<u>மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி</u>**

**அரியலூர்:**அரியலூர் மான்ட்போர்ட் மெட்ரிக் பள்ளி மாணவர்கள் சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.
பள்ளியின் தேசிய பசுமைப்படை மாணவர்கள் மழை நீர் சேகரிப்பின் அவசியத்தை வலியுறுத்தி அரியலூர் பேருந்து நிலையம் அண்ணாசிலை அருகில் இருந்து தொடங்கிய பேரணிக்கு பள்ளி முதல்வர் ஜான்சன், துணை முதல்வர் மணி இமானுவேல் ஆகியோர் தலைமை வகித்தனர். மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பெ. மதிவாணன் தொடக்கி வைத்தார்.

இதில் 200-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு, மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பிச் சென்றனர்.

பேரணி மார்க்கெட் தெரு, சத்திரம் பேருந்து நிறுத்தம், வெள்ளாளத் தெரு, பெரம்பலூர் சாலை, ரயிலடி வழியாக பள்ளியை அடைந்தது. பேரணியில் அரியலூர் மாவட்டக் கல்வி அலுவலர் அன்புச்செழியன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய உதவி நிர்வாகப் பொறியாளர் ஜே.கே. அண்ணாதுரை, நில நீர் வல்லுநர் தர்மலிங்கம், வனச்சரக அலுவலர் சுப்பையா ராஜேந்திரன்,சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் அறிவழகன், பள்ளித் துணை ஆய்வாளர் பழனிச்சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் மற்றும் தமிழ்நாடு அறிவியல் இயக்க உறுப்பினருமான ராஜேந்திரன் செய்தார்.

**பயனற்ற நிலையிலுள்ள நீர்தேக்கத் தொட்டியை அக ற்றக் கோரிக்கை**

**கந்தர்வகோட்டை:**
கந்தர்வகோட்டையில் பயனற்ற நிலையிலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை அகற்ற வேண்டுமென அப்பகுதிமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கந்தர்வகோட்டை ஊராட்சி மாரியம்மன் கோவில் தெருவில் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ளது. இது கடந்த சில ஆண்டுகளாக பயனற்ற நிலையில் உள்ளது.

மேலும் இதன் அருகில் புதிய நீர்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது.

பயனற்ற நிலையிலுள்ள பழைய நீர்தேக்கத்

தொட்டியின் பக்க வாட்டு சுவர்கள் மற்றும் தொட்டியினுள் விரிசல் ஏற்பட்டு சிதலமடைந்துள்ளது.

மேலும் இந்தத் தொட்டியில் அருகில் அங்கன்வாடி மையம், வீடுகள் உள்ளன. எனவே மிகவும் சேதமடைந்துள்ள இந்தத் தொட்டியினை விபத்து ஏதேனும் ஏற்படுத்துவதற்கு முன்பாக இடித்து அப்புறப்படுத்த வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>**கோடைகால பயிர் சாகுபடி விழிப்புணர்வு பிரசாரம்**</u>

**கந்தர்வகோட்டை:** கந்தர்வகோட்டையில் வட்டார வேளாண் விரிவாக்க மையம் சார்பில் கோடைகால பயிர் சாகுபடி குறித்து வாகனம் மூலம் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த விழிப்புணர்வு பிரசார வாகனம் காட்டுநாவல், மட்டங்கால், வேலாடிப்பட்டி, வெள்ளாளவிடுதி, கல்லாக்கோட்டை, வீரடிப்பட்டி, குளத்துநாயக்கர்பட்டி, கோமாபுரம், நொடியூர், துவார், ஆத்தங்கரைவிடுதி, சேவியர்குடிகாடு, மங்கனூர், நம்புரான்பட்டி, நடுப்பட்டி ஆகிய பகுதிகளுக்குச் சென்று, கோடைகாலப் பயிர் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு சம்பங்கிப்பூ சாகுபடி பயிற்சி**

**புதுக்கோட்டை:** புதுக்கோட்டை ஆவுடையாபட்டி அருகே சண்முகநாதபுரத்தில் விவசாயிகளுக்கு சம்பங்கிப்பூ சாகுபடி குறித்த பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

புதுகை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமுக்கு திட்ட அலுவலர் ரா. ராஜ்குமார் தலைமை வகித்தார். இதில், திருச்சி வேளாண் கல்லூரி மாணவர்கள் மலர் சாகுபடி குறித்த கருத்துகளை விவசாயிகளுக்கு அட்டைப்படம் மூலம் விளக்கினர்.

மேலும், விவசாயிகளுக்கு சாகுபடி குறித்த விவரங்களை இணைத் திட்ட அலுவலர் பாரதிதாசன் விளக்கினார்.

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரியில் இறுதியாண்டு மாணவர்கள் 11 பேர் கொண்ட

குழுவினர் புதுக்கோட்டை வட்டாரத்தில் நடைபெற்று வரும் பயிர் சாகுபடி குறித்து களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒருபகுதியாக இந்தப் பயிற்சி முகாம் நடைபெற்றது.

**மக்காச்சோளப் பயிரில்தண்டு துளைப்பான்: கட்டுப்படுத்த வேளாண் துறை யோசனை**

**கந்தர்வகோட்ட:** மக்காச்சோளப் பயிர்களில் தண்டு துளைப்பானின் தாக்குதலைக் கட்டுப்படுத்த வேளாண் துறை யோசனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வட்டார வேளாண் உதவி இயக்குநர் ரவீந்திரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கந்தர்வகோட்டை பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையம் சார்பில் அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் கந்தர்வகோட்டை வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மக்காச்சோளம் பயிர்களில் தண்டு துளைப்பான் புழுத் தாக்குதல் தென்படுகிறது. இந்தப்புழு தண்டினை துளைத்து உள்ளே சென்று தண்டுப் பகுதியை தின்று சேதம் விளைவிக்கும்.

இதன் தாக்குதலால் நடுக்குருத்து காய்ந்துவிடும். தாக்கப்பட்ட பயிர்களில் இருந்து வெளியே வரும் இரண்டு பகுதியிலும் சம அளவில் துவாரங்கள் இருக்கும்.

இந்த தண்டு துளைப்பான் புழுத் தாக்கு

தலைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்போபியூரான் 13 கிலோ அல்லது கார்டாப் 250 கிராம், குளோரி

பைரிபாஸ், சைபர் மெத்திரின் 250 மில்லி தெளித்து கட்டுப்படுத்தலாம்

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாய குழுவுக்கு நடவு இயந்திரம் வழங்க வேண்டும்**

**கும்பகோணம்:** விவசாயிகள் அடங்கிய குழுவுக்கே நடவு இயந்திரங்களை வழங்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி தமிழக அரசை வலியுறுத்தியுள்ளது. இந்தக் கட்சியின் தஞ்சை வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் தாராசுரத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் ம . செல்வம் தலைமை வகித்தார். தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர் தி. திருமால்வளவன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று பேசினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விவசாயிகளின் நலன்காக்கும் தமிழக முதல்வர் ஏழை விவசாயிகள் 8 பேர்

கொண்ட குழுவுக்கு நடவு இயந்திரம் கிடைக்க ஆவணசெய்யவேண்டும். கும்பகோணம் நகராட்சிக்கு அதிக வருவாய் ஈட்டித்தரும் கும்பகோணம் காய்கறி சந்தையில் நானூறுக்கும் மேற்பட்ட தரைக்கடை வியாபாரிகள் மழையிலும், வெயிலிலும் அவதிப்படும் நிலையைப் போக்க மயிலாடுதுறை மக்களவைத் தொகுதி உறுப்பினர் ஆர்.கே. பாரதிமோகனை மேற்கூரை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்வது.

குடந்தை நகரம் மற்றும் ஒன்றியங்களில் புதிய குடும்ப அட்டைக்கு மனு செய்தும் அதன்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காத வட்ட வழங்கல் அதிகாரிகளைக் கண்டிப்பது. காணாமல்போன குடும்ப அட்டைக்குப் பதிலாக மாற்று குடும்ப அட்டை கேட்டு மனு செய்தவர்களுக்கு உடனடியாக குடும்ப அட்டை கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் கட்டாய நன்கொடை வாங்கி நடத்தப்படும் வகுப்புகள் அரசின் அனுமதி பெற்று நடத்தப்படுகிறதா என்பதை மேல்நிலைப் பள்ளிகளின் இயக்குநர் ஆய்வுசெய்ய வேண்டும்.

திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம், திருவையாறு ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளை உள்ளடக்கிய பகுதிகளை இணைத்து தஞ்சை வடக்கு மாவட்டமாகப் பிரித்து அதன் மாவட்டச் செயலாளராக ம . செல்வத்தை இந்தக் கூட்டம் நியமனம் செய்கிறது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தலைமை நிலையச் செயலாளர் உ. கண்ணன், ஆர்.பி. தமிழ்நேசன், கி. ஜோதிலிங்கம், மாநிலத் தொழிற்சங்கப் பேரவைத் தலைவர் கே.வி. சிவராமன், பேரவை மாநிலத் தலைவர் ஜம்புலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். தாராசுரம் பேரூர் அமைப்பாளர் டி. தனவேல் நன்றி கூறினார்.

**"தூர்வாரும் பணிகள் ஒரு மாதத்தில் நிறைவடையும்'**

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள ஆறுகள், ஏரிகள், குளங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகள் ஒரு மாதத்தில் முடிவடையும் என்றார் ஆட்சியர் என். சுப்பையன்.
தஞ்சாவூர் அருகே புலவர் நத்தம் கிராமத்தில் வடவாற்றில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணியையும், வீரசிங்கம்பேட்டை அருகே திருச்சோற்றுத்துறையில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே தளமட்டச் சுவர் கட்டுமானப் பணியையும் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்ட அவர் அளித்த பேட்டி:

மாவட்டத்தில் 2014-15 ஆம் நிதியாண்டுக்கான பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டை ஆதாரமாகக் கொண்டு கீழ் காவிரி வடிநில வட்டத்தின் தஞ்சாவூர் கட்டுப்பாட்டில் உள்ள காவிரி வடிநில கோட்டத்தில் 139.10 கி.மீ. தொலைவில் 38 தூர்வாரும் பணிகள் ரூ. 1.62 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்படுகிறது.

இதேபோல, காவிரி வடிநிலக் கிழக்குக் கோட்டத்தின் மயிலாடுதுறையில் 13.90 கி.மீ. தொலைவி0ல் 3 தூர்வாரும் பணிகள் ரூ. 15.50 லட்சத்திலும், தஞ்சாவூர் வெண்ணாறு வடிநிலக் கோட்டத்தில் 26.50 கி.மீ. தொலைவில் 8 தூர் வாரும் பணிகள் ரூ. 39 லட்சத்திலும், கல்லணைக் கால்வாய் கோட்டத்தில் 100.44 கி.மீ. தொலைவில் 27 தூர்வாரும் பணிகள் ரூ. 1.33 கோடியிலும், பட்டுக்கோட்டை அக்னியாறு வடிநிலக் கோட்டத்தில் 6.65 கி.மீ. தொலைவில் 3 தூர்வாரும் பணிகள் ரூ. 8.40 லட்சம் மதிப்பிலும் என மொத்தம் 286.59 கி.மீ. தொலைவில் 79 தூர்வாரும் பணிகள் ரூ. 3 கோடியே 57 லட்சத்து 90 ஆயிரம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளை ஒரு மாதத்தில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகள் விடுத்த கோரிக்கைகளின்படி, பாசன நலன் கருதி பராமரிப்பு ஒதுக்கீட்டில் 1,021.05 கி.மீ. தொலைவில் 254 தூர் வாரும் பணிகள் ரூ. 11 கோடியில் செயல்படுத்துவதற்கான தொடக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கட்டுமானங்கள் சீரமைத்தலுக்காக தஞ்சாவூரில் உள்ள காவிரி வடிநிலக் கோட்டத்தில் 18 பணிகள் ரூ. 99.50 லட்சத்திலும், வெண்ணாறு வடிநில

கோட்டத்தில் இரு பணிகள் ரூ. 20 லட்சத்திலும், கல்லணை கால்வாய் கோட்டத்தில் 19 பணிகள் ரூ. 1.47 கோடியிலும், அக்னியாறு வடிநில கோட்டத்தில் 6 பணிகள் ரூ. 36.20 லட்சத்திலும் என மொத்தம் 45 பணிகள் ரூ. 3 கோடியே 2 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் நடைபெற்று வருகின்றன. நபார்டு திட்டத்தில் ரூ. 37.88 கோடியில் 25 தளமட்டச் சுவர்கள், தடுப்பணைகள் கட்டும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. 13-வது நிதிக்குழு மரபு சார்ந்த ஏரிகளைப் புனரமைத்தல் திட்டத்தில் கல்லணைக் கால்வாயில் 46 பணிகள் ரூ. 11 கோடியே 60 லட்சத்து 37 ஆயிரம் மதிப்பில் விரைவாக நடைபெற்று வருகின்றன என்றார் ஆட்சியர்.

அப்போது, பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் டி. கலைச்செல்வன் உள்ளிட்டோர் உடன் சென்றனர்.

**"வேப்பந்தட்டை உழவர் சந்தை செயல்பட நடவடிக்கை தேவை'**

**பெரம்பலூர்:** பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் செயல்படாமல் உள்ள உழவர் சந்தையைப் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.
பெரம்பலூர் மாவட்டத்தில், பெரம்பலூர்- வடக்குமாதவி சாலையில் தொடங்கப்பட்ட உழவர் சந்தைக்கு மாவட்

டத்தில் உள்ள அனைத்துப் பகுதி விவசாயிகளும் வந்து சென்றதால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டது.

இதைத் தவிர்க்க வேப்பந்தட்டை ஒன்றிய விவசாயிகளுக்காக வேப்பந்தட்டை வட்டாட்சியர் அலுவலகம் அருகே 2011-ல் புதிய உழவர் சந்தை திறக்கப்பட்டது.

ஆனால் போதிய பராமரிப்பின்றி ஒரு சில மாதங்களிலேயே மூடப்பட்டது. இதனால் வேப்பந்தட்டை ஒன்றிய விவசாயிகள் காய்கறிகளை இடைத்தரகர்களிடம் குறைந்த விலைக்கு விற்கின்றனர்.

மேலும், அப்பகுதி மக்கள் பெரும்பாலானோர் காய்கறி வாங்க பெரம்பலூருக்கு வந்து செல்கின்றனர்.

எனவே, மூடிக்கிடக்கும் உழவர் சந்தையை சீரமைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வர வேளாண் துறையினர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நிலக்கடலை, பால் மதிப்பு கூட்டுதல் பயிற்சி பெற அழைப்பு**

**பெரம்பலூர்:** பெரம்பலூர் அருகே, வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கு நிலக்கடலை மற்றும் பாலில் மதிப்பு கூட்டுதல் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப . விஜயலட்சுமி தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் பால் பொருள்கள் தயாரிப்பு குறித்த பயிற்சி ஜூலை 15-ம் தேதியும், நிலக்கடலையிலிருந்து மதிப்பு கூட்டிய பொருள்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி 17-ம் தேதியும் இலவசமாக நடைபெற உள்ளது.

இந்த பயிற்சியில் பால் மற்றும் நிலக்கடலையில் உள்ள சத்துக்கள், நம் அன்றாட உணவில் அவற்றை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பது குறித்த மதிப்புக் கூட்டுதல் தொழில்நுட்ப பயிற்சி விளக்க உரையாகவும், செயல்முறை பயிற்சியாகவும் அளிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சியில் பங்கேற்க ஆர்வமுள்ள ந பர்கள் நேரடியாக அல்லது நிலைய 04328- 293251, 293592 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்களே பயிற்சியில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள்.

எனவே, ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக பெயரை பதிவு செய்து பயன் பெறலாம் என்றார்.

**ஆறுகள், வாய்க்கால்களில் தூர்வாரும் பணி: ஆட்சியர் ஆய்வு**

திருவாரூர் மாவட்டத்தில் பாசன ஆறுகள், வாய்க்கால் மற்றும் கால்வாய்களில் தூர்வாரும் பணிகள் நிறைவடைந்துள்ளன. இவற்றை வெள்ளிக்கிழமை மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் ஆய்வு செய்தார்.

மாவட்டத்தில் பொதுப்பணித் துறை சார்பில், கொரடாச்சேரி அருகே ஊர்குடியில் ரூ. 6.5 லட்சம், வலங்கைமான் அருகே நரிக்குடியில் ரூ. 6 லட்சம், நீடாமங்கலம் அருகே முல்லைவாசலில் ரூ. 2.50 லட்சம், நாரணமங்கலம் வாய்க்கால் ரூ. 2 லட்சம், மன்னார்குடி ஒன்றியத்தில் வெட்டைத் திடலில் ரூ. 8 லட்சம், மேலப்பாலத்தில் ரூ. 3 லட்சம், செருமங்கலத்தில் ரூ. 5 லட்சம் என மொத்தம் ஏழு இடங்களில் உள்ள பாசன வாய்க்கால்கள் ரூ. 33 லட்சத்தில் தூர்வாரப்பட்டுள்ளது.

தூர்வாரப்பட்ட பகுதிகளில் ஆட்சியர் எம். மதிவாணன் ஆய்வு மேற்கொண்டு நடைபெற்ற பணிகள் குறித்து விவரம் கேட்டறிந்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறியது:

ஆண்டுதோறும் தூர்வாரும் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து பராமரிக்கப்படுகிறது. நிகழ் நிதியாண்டில் ஆறுகளில் 6 பணி, வாய்க்கால்களில் 22 பணி, வடிகால்களில் 12 பணி என மொத்தம் 40 பணிகள் மூலம் 179 கி.மீ. தொலைவு ரூ. 1.86 கோடியில் தூர்வார திட்டமிடப்பட்டது.

இதில் ஆறுகளில் தூர்வாரும் பணி நிறைவடைந்துள்ளது. வாய்க்காலில் 14 பணிகள், வடிகால்களில் 7 பணிகள் நிறைவடைந்துள்ளன.

திட்டமிட்ட 40 பணிகளில் 27 பணிகள் நிறைவுபெற்றுள்ள நிலையில் எஞ்சிய பணிகள் நடைபெ ற்று வருகிறது.

அனைத்துப் பணிகளும் பாசனத்துக்கு வாய்க்கால்களில் நீர் திறந்துவிடும் முன்பு

முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார் மதிவாணன்.

ஆய்வின்போது வெண்ணாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர்கள் ரவிச்சந்திரன் (திருவாரூர்), குணசேகரன் (தஞ்சை), உதவி செயற்பொறியாளர்கள் மாரிமுத்து (திருவாரூர்), மரியம்சூசை (மன்னர்குடி), லோகிராஜ் (திருத்துறைப்பூண்டி), சுப்பையன் (முத்துப்பேட்டை) ஆகியோர் உடனிருந்தனர்.

**<u>தோவாளை சந்தையில் பூக்கள் விலை சரிவு</u>**

**நாகர்கோவில்:** தோவாளை பூச்சந்தையில் ஞாயிற்றுக்கிழமை பூக்களின் விலையில் சரிவு ஏற்பட்டது.
தோவாளை பூச்சந்தைக்கு குமரி மாவட்டம் மட்டுமல்லாது திருநெல்வேலி மாவட்டத்திலிருந்தும் அதிகமான பூக்கள் வருகின்றன. மேலும், இங்கிருந்து கேரளத்துக்கும் பூக்கள் அனுப்பப்படுகின்றன. தோவாளை பூச்சந்தையில் நிர்ணயிக்கப்படும் விலைதான் பிற பூச்சந்தைகளிலும் இருக்கும்.

இந்நிலையில் இச்சந்தையில் ஞாயிற்றுக்கிழமை திடீரென பூக்களின் விலையில் சரிவு ஏற்பட்டது.

கடந்த இரு நாள்களுக்கு முன் விற்பனையான பிச்சிப்பூ கிலோ ரூ.200 இலிருந்து ரூ.120 ஆக குறைநத்து. அதுபோல் மல்லிகை கிலோ ரூ.150 இலிருந்து ரூ.70-க்கு விற்பனையானது.

கேந்தி ரூ.60, வாடாமல்லி ரூ.40, சம்பங்கி ரூ. 60, மரிக்கொழுந்து ரூ.80, கொழுந்து ரூ.100-க்கும் விற்பனையானது.

ஆவணி மாதத்தில் திருமணங்கள், ஓணம் பண்டிகை வருவதால் பூக்களின் விலை மீண்டும் உயர்வதற்கு வாய்ப்பு உள்ளதாக பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

**<u>விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம்,கருவிகள் வழங்க வலியுறுத்தல்</u>**

**நாகர்கோவில்:**டெல்டா மாவட்டங்களைப்போல் குமரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும் மானிய விலையில் கருவி, உரங்கள் வழங்க வேண்டும் என பாசனத் துறைத் தலைவர் வின்ஸ் ஆன்றோ தமிழக முதல்வரை வலியுறுத்தியுள்ளார்.
இதுகுறித்து அவர் தமிழக முதல்வருக்கு அனுப்பி உள்ள மனு விவரம்: டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலன்காக்கும் வகையில் முழுமையான மானியத்தில் தரமான விதை, நடவு இயந்திரம், மோட்டார் பொருத்திய களையெடுக்கும் கருவி, மின்மோட்டார்கள், நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்கள் உள்ளிட்ட பல்வேறு உதவிகள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்திலும் அண்மைக் காலமாக மழை அளவு குறைந்துள்ளது. காலநிலை மாற்றத்தால் பூச்சி தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விவசாயத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. நெல் விவசாயப் பரப்பளவும் குறைந்து வருகிறது.

எனவே நெல் விவசாயத்துக்குப் பதிலாக வாழை, தென்னை போன்ற பயிர்களை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். மேலும், இம்மாவட்டத்தில் ரப்பர் விவசாயமும் கேள்விக்குறியாக உள்ளது.

எனவே குமரி மாவட்டத்தில் விவசாயத்தை காக்கும் வகையில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதோடு, டெல்டா மாவட்டங்களைப்போல் மானிய விலையில் விவசாயக் க ருவிகள், உரங்கள் வழங்க வேண்டும் என்றார் அவர்.

## "இறால் வளர்ப்பு பண்ணை பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்'

**தூத்துக்குடி:** தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஜூலை 23 ஆம் தேதி தொடங்கும் வளங்குன்றா இறால் வளர்ப்பு பண்ணை மற்றும் உற்பத்திக்கான சிறந்த மேலாண்மை முறைகள் குறித்த பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுகுறித்து மீன்வளக் கல்லூரி முதல்வர் கோ. சுகுமார் வெளியிட்ட

செய்திக்குறிப்பு: தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள மீன்வள விரிவாக்கத் துறை சார்பில், வளங்குன்றா இறால் வளர்ப்புப் பண்ணை மற்றும் உற்பத்திக்கான சிறந்த மேலாண்மை முறைகள் என்ற பயிற்சி நடைபெற உள்ளது.

மூன்று நாள்கள் நடைபெறும் இப்பயிற்சி ஜூலை 23 ஆம் தேதி தொடங்கி 25 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. பயிற்சியில் இறால் வளர்ப்போர்,  இறால் பண்ணையில் ப ணிபுரிவோர், இறால் வளர்ப்பில் ஆர்வமுள்ள வேலையற்ற ஊரக   இளைஞர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கலாம்.

பயிற்சியின்போது வளங்குன்றா இறால் வளர்ப்புக்கான சிறந்த மேலாண்மை முறைகள், இறால் பண்ணைக்கான இடத்தேர்வு,  பண்ணையமைப்பு மற்றும் குளங்கள் தயாரிப்பு முறைகள், இறால் வளர்ப்பு பண்ணைக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்படுகிறது.

மேலும், இறால் வளர்ப்புக்கு தரமான குஞ்சுகளை தேர்வு செய்து இருப்பு செய்யும் முறைகள், இறால் வளர்ப்புக் குளத்தில் நீர் தர    மேலாண்மை முறைகள், இறால் தீவனம் மற்றும் சிறந்த தீவன மேலாண்மை முறைகள், உயிர் கூழ்ம தொழில்நுட்பம், சுற்றுச்சூழல் பாதிப்பில்லா இறால் வளர்ப்பு உள்ளிட்டவை குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் பேராசிரியர் மற்றும் தலைவர், மீன்வள விரிவாக்கத் துறை, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி 628008 என்ற முகவரியில் தொடர்பு கொண்டு தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சிக்கு தேர்வு செய்யப்படும் தகுதியான நபர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். மேலும் விவரங்கள் அறிய விரும்புவோர் 0461-2340554 என்ற தொலைபேசி எண்ணிலும்,  9894530161 மற்றும் 9442123115 என்ற செல்போன் எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

## திருந்திய நெல் சாகுபடி: ஹெக்டேருக்கு ரூ.3,750 நடவு மானியம்

**திருநெல்வேலி:** திருநெல்வேலி மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி, நடவு இயந்திரம் மூலம் நடவு செய்தால் ஹெக்டேருக்கு ரூ.3,750 மானியம் வழங்கப்படும் என , திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: குறைந்த அளவு நீரைக் கொண்டு அதிக மகசூல் பெற்றிடும் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் மிகச் சிறந்ததாகும். விவசாயிகள் இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நெல் சாகுபடி செய்து பயன்பெறலாம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் கார் பருவ சாகுபடிக்கு மணிமுத்தாறு பெருங்கால் பாசனம், பாபநாசம், ராமநதி, கடனாநதி, கருப்பாநதி, அடவிநயினார் அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, முக்கூடல், கடையம், தென்காசி, செங்கோட்டை ஆகிய வட்டாரங்கள் பாசனம் பெறுகின்றன.

நெல் சாகுபடிக்குத் தேவையான குறுகிய கால நெல் ரகங்களான அம்பை 16, ஆடுதுறை 45 ஆகிய நெல் ரகங்களும் அனைத்து வேளாண் அலுவலகங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும், நெல் நடவுக்குத் தேவையான ரசாயன உரங்கள் அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும், தனியார் உரக் கடைகளிலும் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

நெல் விதைகள் ஒரு கிலோவுக்கு ரூ.10 வீதம் 50 கிலோ கொண்ட ஒரு மூட்டைக்கு ரூ.500 என்ற அளவில் மானியம் வழங்கப்படுகிறது. இதற்காக 550 மெட்ரிக் டன் விதை நெல் வழங்கிட ரூ.55 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது போதிய மழை கிடைக்காத சூழலில் விவசாயிகள் கிடைக்கும் நீரைக் கொண்டு திருந்திய நெல் சாகுபடி முறை தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து சாகுபடி செய்ய வேண்டும்.

திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றும் விவசாயிகள் நடவு இயந்திரம் கொண்டு நடவு செய்தால் ஒரு ஹெக்டேருக்கு (அதாவது 2.47 ஏக்கர்) ரூ.3,750 என்ற அளவில் நடவு மானியம் வழங்கப்படுகிறது.

இதன்படி 550 ஹெக்டேருக்கு (அதாவது 1,375 ஏக்கர்) ப ரப்பில் இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி நடவு செய்ய மொத்த மானியத் தொகை ரூ.20.62 லட்சம் திருநெல்வேலி மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து விவசாயிகள் அருகில் உள்ள அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குநரைத் தொடர்புகொண்டு பயன்பெறலாம் என்றார் அவர்.

<u>பிரதான அணைகளில் நீர்இருப்பு பாதியாகச் சரிவு</u>

**திருநெல்வேலி:**தென்மேற்குப் பருவமழை தொடங்கி 5 வாரம் கடந்தபோதிலும் மழையே பெய்யாததால், திருநெல்வேலி மாவட்ட அணைகளின் நீர்மட்டம் எதிர்பார்த்தவாறு உயரவில்லை. இதனால், கார்பருவ சாகுபடிக்கு முழுமையாகத் தண்ணீர் வழங்க  முடியுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.
தென்மேற்குப் பருவமழை ஜூன் மாதம் முதல் வாரத்தில் தொடங்கியது. எனினும் மழை நீடிக்கவில்லை. இதனால், அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க தாமதம் ஏற்பட்டு, தாமிரவருணி பாசனத்தில் ஜூன் முதல் வாரத்தில் தொடங்க வேண்டிய கார் பருவ சாகுபடி பணியை விவசாயிகள் ஜூலை முதல் வாரத்தில்தான் தொடங்கியுள்ளனர்.

இப்பாசனத்தில் முதல் கட்டமாக ஜூலை 4ஆம் தேதி பாபநாசம் அணையிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் 4 கால்வாய்கள் மூலம் பாசனம் பெற்று வரும் 18,090 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் திறக்கப்பட்டது.

மணிமுத்தாறு அணையிலிருந்து ஜூன் முதல் தேதியில் பெருங்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு 2786 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டதையடுத்து ஆழ்வார்குறிச்சி, கடையம், கீழஆம்பூர் பகுதியில் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன.

இதையடுத்து, விவசாயிகள் முழுவீச்சில் சாகுபடி பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பாபநாசம் அணையில் இருந்து பாசனத்துக்கு கூடுதலாக 500 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையிலிருந்து பாசனத்துக்கு 1100 கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 175 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தாமிரவருணி பாசனத்தில் இம்மாவட்டத்தில் திருநெல்வேலி கால்வாய், பாளையங்கால்வாய், கோடகன் கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 22,000 ஏக்கர் நிலங்களுக்கு மட்டும் இன்னும் தண்ணீர் திறக்கப்படவில்லை.

தென்மேற்குப் பருவமழை தொடங்கி 5 வாரங்கள் கடந்தபோதிலும் மழை நீடிக்காததால், அணைகளின் நீர் இருப்பு கவலை அளிப்பதாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தென்மேற்குப் பருவத்தில் நிகழாண்டில்தான் மழை தீவிரம் அடையவில்லை என்றும், அணைகளின் நீர்இருப்பும் 43 சதவீதம் குறைவாக இருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2013, ஜூலை 13 ஆம் தேதி 122.75 அடியாக இருந்தது. நிகழாண்டு அதே தேதியில் 59.40 அடியாக உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டால் இது 48.3 சதவீதம் குறைவு. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் கடந்த ஆண்டு 134.25 அடியாக இருந்தது. இப்போது 69.95 அடியாக உள்ளது. இது கடந்த ஆண்டைவிட 52.1 சதவீதம் குறைவாகும்.

பிரதான அணைகளான இவ்விரு அணைகளின் நீர்மட்டம் 100 அடிகூட எட்டாத நிலையில், தற்போதைய நீர்இருப்பின் மூலம் பாசனத்துக்கு முழுமையாகத் தண்ணீர் வழங்க முடியுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

அணைகளின் நீர்வரத்து: ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 854.28 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 3 கனஅடியும், கடனாநதி அணைக்கு 75 கனஅடியும், ராமநதி அணைக்கு 40 கனஅடியும், குண்டாறு

அணைக்கு 5 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 8 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 59.47 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 52.30 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 65 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 41.60 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் 36.10 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 62.50 அடியாகவும் இருந்தது.

**பிரதான அணைகளில் நீர்இருப்பு பாதியாகச் சரிவு**

**திருநெல்வேலி:** தென்மேற்குப் பருவமழை தொடங்கி 5 வாரம் கடந்தபோதிலும் மழையே பெய்யாததால், திருநெல்வேலி மாவட்ட அணைகளின் நீர்மட்டம் எதிர்பார்த்தவாறு உயரவில்லை. இதனால், கார்பருவ சாகுபடிக்கு முழுமையாகத் தண்ணீர் வழங்க முடியுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.
தென்மேற்குப் பருவமழை ஜூன் மாதம் முதல் வாரத்தில் தொடங்கியது. எனினும் மழை நீடிக்கவில்லை. இதனால், அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க தாமதம் ஏற்பட்டு, தாமிரவருணி பாசனத்தில் ஜூன் முதல் வாரத்தில் தொடங்க வேண்டிய கார் பருவ சாகுபடி பணியை விவசாயிகள் ஜூலை முதல் வாரத்தில்தான் தொடங்கியுள்ளனர்.

இப்பாசனத்தில் முதல் கட்டமாக ஜூலை 4ஆம் தேதி பாபநாசம் அணையிலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் 4 கால்வாய்கள் மூலம் பாசனம் பெற்று வரும் 18,090 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் திறக்கப்பட்டது.

மணிமுத்தாறு அணையிலிருந்து ஜூன் முதல் தேதியில் பெருங்கால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு 2786 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டதையடுத்து ஆழ்வார்குறிச்சி, கடையம், கீழஆம்பூர் பகுதியில் சாகுபடி பணிகள் தீவிரமடைந்துள்ளன. இதையடுத்து, விவசாயிகள் முழுவீச்சில் சாகுபடி பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே, தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று பாபநாசம் அணையில் இருந்து பாசனத்துக்கு கூடுதலாக 500 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையிலிருந்து பாசனத்துக்கு 1100 கனஅடியும், மணிமுத்தாறு அணையிலிருந்து 175 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

தாமிரவருணி பாசனத்தில் இம்மாவட்டத்தில் திருநெல்வேலி கால்வாய், பாளையங்கால்வாய், கோடகன் கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 22,000 ஏக்கர் நிலங்களுக்கு மட்டும் இன்னும் தண்ணீர் திறக்கப்படவில்லை.

தென்மேற்குப் பருவமழை தொடங்கி 5 வாரங்கள் கடந்தபோதிலும் மழை நீடிக்காததால், அணைகளின் நீர் இருப்பு கவலை அளிப்பதாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தென்மேற்குப் பருவத்தில் நிகழாண்டில்தான் மழை தீவிரம் அடையவில்லை என்றும், அணைகளின் நீர்இருப்பும் 43 சதவீதம் குறைவாக இருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2013, ஜூலை 13 ஆம் தேதி 122.75 அடியாக இருந்தது. நிகழாண்டு அதே தேதியில் 59.40 அடியாக உள்ளது. கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டால் இது 48.3 சதவீதம் குறைவு. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் கடந்த ஆண்டு 134.25 அடியாக இருந்தது. இப்போது 69.95 அடியாக உள்ளது. இது கடந்த ஆண்டைவிட 52.1 சதவீதம் குறைவாகும்.

பிரதான அணைகளான இவ்விரு அணைகளின் நீர்மட்டம் 100 அடிகூட எட்டாத நிலையில், தற்போதைய நீர்இருப்பின் மூலம் பாசனத்துக்கு முழுமையாகத் தண்ணீர் வழங்க முடியுமா என்ற அச்சம் எழுந்துள்ளது.

அணைகளின் நீர்வரத்து: ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 854.28 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு 3 கனஅடியும், கடனாநதி அணைக்கு 75 கனஅடியும், ராமநதி அணைக்கு 40 கனஅடியும், குண்டாறு அணைக்கு 5 கனஅடியும், அடவிநயினார் அணைக்கு 8 கனஅடியும் நீர்வரத்து

இருந்தது.

மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 59.47 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 52.30 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 65 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 41.60 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் 36.10 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 62.50 அடியாகவும் இருந்தது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**மேட்டூர் அணை நீர்மட்டம் 4 அடி உயர்வு; பயிர்கள் மூழ்கியதால் விவசாயிகள் சோகம்**

**மேட்டூர்:** மேட்டூர் அணை நீர்மட்டம் நான்கு அடி உயர்ந்ததால், வறண்ட நிலப்பரப்பில் சாகுபடி செய்த பயிர்கள், நீரில் மூழ்கியது, விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மேட்டூர் அணை ,152 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது. அணை மொத்த நீர்மட்டம், 120 அடி. அணை நிரம்பும்போது, 152 சதுர கி.மீ., பரப்பளவில், தண்ணீர் தேங்கி, கடல்போல் காட்சியளிக்கும். கடந்த ஜனவரி இறுதியில், டெல்டா பாசனத்துக்கு, நீர் நிறுத்தியபோது, மேட்டூர் அணை நீர்மட்டம், 51.400 அடியாக இருந்தது. இதனால், அணையில், 80 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதி வறண்டு விட்டது. வறண்ட நீர்பரப்பு பகுதியில், அணை கரையோர விவசாயிகள் சோளம், எள், கம்பு, ராகி உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர். இரு மாதத்துக்கு முன்பு, நீர்மட்டம், 43 அடியாக குறைந்ததை

தொடர்ந்து, அந்த நிலத்திலும், விவசாயிகள் சாகுபடி செய்தனர்.இந்நிலையில், தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்து, இரு வாரங்களில், மேட்டூர் அணை நீர்மட்டம், நான்கு அடி உயர்ந்தது. அதனால், நீர்மட்டம், 47 அடியாக உயர்ந்ததால், அணையில், 43 அடி முதல், 47 அடி வரையிலான நீர்பரப்பு பகுதியில் சாகுபடி செய்த எள், சோளம் உள்ளிட்ட பயிர்கள், அறுவடைக்கு இரு வாரமே இருந்த நிலையில், நீரில் மூழ்கியது.கூடுதல் நீர் வரத்தால், மேட்டூர் அணை நீர்பரப்பு பகுதியில், 100 ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்த பயிர்கள், நீரில் மூழ்கியது. அதனால், கரையோர விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.காவிரி நீர்பிடிப்பு பகுதியில், பருவமழை தீவிரம் அடைந்து, நீர்வரத்து அதிகரித்ததால், கடந்த, 26ம் தேதி, 43.080 அடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்மட்டம், கடந்த, 11ம் தேதி, 47.720 அடியாக உயர்ந்தது. கூடுதல் நீர்வரத்தால், கடந்த இரு வாரங்களில், நீர்மட்டம் நான்கு அடியும், நீர் இருப்பு மூன்று டி.எம்.சி.,யும் அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

**கரும்பு கிரயத்தொகை வழங்க அரசுக்கு கோரிக்கை விடுப்பு**

**நாமக்கல்:** ""கரும்பு கிரயத்தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்," என , இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் விருத்தகிரி கூறினார்.

தமிழகத்தில், 14 மாவட்டங்களில், கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் என , மொத்தம், 44 ஆலைகள் இயங்கி வருகின்றன. அதில், கூட்டுறவில் ஐந்து, பொதுத்துறையில் ஒன்று, தனியார் ஆலைகளில் ஒன்று என , மொத்தம், ஏழு ஆலைகளில் மட்டுமே, விவசாயிகளுக்கு கரும்பு கிரயத்தொகை, முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

மற்ற, 37 ஆலைகளில், விவசாயிகளுக்கு, கரும்பு கிரயத்தொகை வழங்காமல், நிலுவை வைத்துள்ளது. அதனால், சர்க்கரை ஆலைகளுக்கு, கரும்பு சப்ளை செய்த விவசாயிகள், கிரயத்தொகை கிடைக்காததால், விழிபிதுங்கியுள்ளனர்.ஆண்டுக்கு ஆண்டு, கரும்பு சாகுபடி பரப்பளவு குறைந்து கொண்டே செல்கிறது. இதே நிலை

நீடித்தால், அரவைக்கு போதுமான கரும்பு இல்லாமல், பல  ஆலைகள் மூடப்படும் நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு கரும்பு கிரயத்தொகையை வழங்காத ஆலைகள் மீது, வருவாய் மீட்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

இதுகுறித்து, இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் விருத்தகிரி கூறியதாவது: தமிழகத்தில், ஒரு சில ஆலைகளை தவிர, பல்வேறு சர்க்கரை ஆலைகள், கரும்பு விவசாயிகளுக்கு, 1,000 கோடி ரூபாய் அளவுக்கு, கிரயத்தொகையை பாக்கி வைத்துள்ளது. நிலுவைத்தொகையால், விவசாய குடும்பங்களில், கல்வி, திருமணம், மருத்துவம் போன்ற செலவுகள் முடங்கியுள்ளது.ஆலைகளில் உள்ள நிலுவை தொகையை பெற்றுத்தர வேண்டும் என , இந்திய விவசாய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள், அமைச்சர்களை நேரில் சந்தித்து, கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.விவசாயிகளுக்கு, கரும்பு கிரயத்தொகை கிடைக்க , தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

**<u>வேளாண் அமைப்பாளர் பயிற்சி முகாம்</u>**

**நாமக்கல்:**

"வேளாண் அமைப்பாளர் பயிற்சி முகாம், எலச்சிப்பாளையம் யூனியன் அலுவலகத்தில் நடக்கிறது' என , உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் பாலசுப்ரமணி தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:திருச்செங்கோடு தாலுகா, எலச்சிபாளையம் யூனியன் அலுவலகத்தில், இன்று (14ம் தேதி) மற்றும் நாளை (15ம் தேதி) ஆகிய இரண்டு நாட்களுக்கு, காலை, 10 மணிக்கு, வேளாண் அமைப்பாளர்களுக்கு உழவர் பறிற்சி மையம் சார்பில் பயிற்சி அளிக்கப்படும். அதில், உழவர் மன்ற அமைப்பாளர் மற்றும் விவசாயிகள் பங்கேற்கலாம்.வேளாண், தோட்டக்கலை, கால்நடை, வேளாண் பொறியியல், வேளாண் விற்பனை மற்றும் வளர்ச்சி, வனம், வேளாண் அறிவியல் நிலையம் உள்ளிட்ட அலுவலகத்தில் பணியாற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் பங்கேற்று பயிற்சி வழங்குவர். எனவே, விருப்பமுள்ள விவசாயிகள் மற்றும் உழவர்மன்ற அமைப்பாளர்கள் பங்கேற்று பயனுள்ள தகவல்களை

பெறலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## மானாவாரியில் சாமையை பயிரிட வேளாண் அதிகாரி வேண்டுகோள்

**தர்மபுரி:** மாவட்டத்தில், மானாவாரிக்கேற்ற பயிரான சாமையை, குறுகிய காலத்தில், பயிரிட்டு லாபம் பெற, வேளாண் அதிகாரி, விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து, மாவட்ட உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் பாஸ்கர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மானாவாரிக்கேற்ற மகத்தான பயிரான சாமை குறுகிய காலத்தில், குறைவான இடுபொருள் செலவில், மிகுந்த லாபம் பெற ஏற்ற பயிராகும். தற்போது, ஆடிப்பட்டத்தில் உரிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி சாமை சாகுபடி செய்வதன் மூலம் குறுகிய காலத்தில் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்.வறட்சியை தாங்கி உயர் விளைச்சல் தரக்கூடிய, சாமை ரகங்களான, கோ,3, கோ (சாமை), 4, பையூர், 2, கே,1 ஆகிய ரகங்களை சாகுபடி செய்ய வேண்டும். ஏக்கருக்கு, ஐந்து கிலோ விதை போதுமானதாகும். பயிரின் வளர்ச்சி ஒரே சீராக இருக்க விதைப்பான் மூலம் வரிசை விதைப்பு செய்யலாம். விதைகளை, 2.5 செ.மீ., ஆழத்தில் வரிசைக்கு, வரிசை, 25 செ.மீ., இடைவெளியும், பயிருக்கு, பயிர், 10 செ.மீ., இடைவெளியும் இருக்குமாறு விதைப்பு செய்ய வேண்டும். சாமை விதையின் அளவு மிகவும் சிறியதாக இருப்பதால், முளைத்து வர , ஐந்து முதல், ஏழு நாட்கள் வரை ஆகும். விதைப்பதற்கு, 24 மணி நேரத்துக்கு முன், விதைகளை, தேவையான அளவு நன்கு ஆறிய அரிசி கஞ்சியுடன், ஒரு பாக்கெட் அசோஸ்பைரில்லம் மற்றும் ஒரு பாக்கெட் பாஸ்போ பாக்டீரியா போன்ற உயிர் உரங்களுடன் கலந்து, விதை நேர்த்தி, பின், உலர்த்தி விதைக்க வேண்டும். இதனால், தேவையான தழைச்சத்து, காற்றில் இருந்து, உயிர் உரங்களில் உள்ள நுண்ணுயிரிகளால், பயிர் நல்ல வளர்ச்சி பெறும். மண் பரிசோதனை செய்யாவிட்டால், பொதுப்பரிந்துரையான, ஏக்கருக்கு, ஐந்து டன் மக்கிய தொழுஎரு, 16 கிலோ தழைச்சத்து தரவல்ல, யூரியா, 35 கிலோ மற்றும், எட்டு

கிலோ மணிச்சத்து தரவல்ல, 50 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரங்களை இடுவதன் மூலம், அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு, அவர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## வார சந்தையில் எருது வரத்து அதிகரிப்பு; விவசாய பணியால் விற்பனை அதிகரிப்பு

**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்டத்தில், முதல் போக நெல் சாகுபடி மற்றும் மானாவாரி நிலங்களில், விதைப்பு பணிகள் துவங்கிய நிலையில், வார சந்தைகளில் எருது மாடுகள் விற்பனை அதிகரித்துள்ளது.

விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக உள்ளது. விவசாயத்தில், பண்ணை எந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ், நவீன கருவிகளை கொண்டு விவசாயம் மேற்கொள்ளப்பட்டாலும், கிராம பகுதிகளில், விவசாயத்தின் அனைத்து தேவைகளுக்கும் கால்நடைகள் பயன்படுத்தப்படுகிறது.

ஏர் உழுதல், பரம்பு இழுத்தல், வண்டிகளை இழுக்க, அறுவடையின் போது நெல் அடிக்க போன்ற பணிகளுக்கு, எருதுகள் பயன்படுத்தப்படுகிறது. ஏர் உழுவதற்கு, தற்போது, காலை, 7 மணிக்கு சென்றால், மதியம், 12 மணி வரை ஏர் உழ , 600 ரூபாய் கூலியாக வழங்கப்படுகிறது. கூலி அதிகம் என்பதாலும், மேலும், தங்களிடம் எருதுகள் இருந்தால், எப்போது வேண்டுமானாலும் ஏர் பூட்டி தங்கள் நிலத்தில் ஏர் உழலாம் என்பதாலும் பல  விவசாயிகள் சொந்தமாக ஏர் மாடுகளை, அதாவது, எருதுகளை வாங்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கால்நடைகளை விற்பனை செய்ய வாரச்சந்தைகள் கூடுகிறது. இவ்வாறு, கூடும் வாரச்சந்தைகளில், கால்நடைகளை விற்பனை செய்ய ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலத்தில் இருந்து வியாபாரிகள் கால்நடைகளை கொண்டு வருகின்றனர். மேலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த  விவசாயிகள் மற்றும் வியாபாரிகளும், வாரச்சந்தைகளுக்கு, கால்நடைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். நேற்று, போச்சம்பள்ளியில் கூடிய வாரச்சந்தையில் வழக்கமாக, 25 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு ஜோடி எருது

மாடு, 30 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. மேலும், வழக்கமான சந்தைகளில் வளர்ப்பு மற்றும் இறைச்சிக்கு என்று, 500க்கும் மேற்பட்ட மாடுகள் விற்பனையானது. நேற்று, ஆயிரத்துக்கும் மேற்பட்ட எருது மாடுகள் ஜோடியாக விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து, சந்தூரை சேர்ந்த மாட்டு வியாபாரி ரமேஷ் கூறியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் விவசாய தேவைக்கு முக்கிய நீர் ஆதாரமாக உள்ள கே.ஆர்.பி., அணையில் இருந்து முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் நெல் சாகுபடி பணியை துவங்கி உள்ளனர். இதற்கு, எருது மாடுகள் முக்கிய பங்காக உள்ளது.

மேலும், மாவட்டத்தில், சில நாட்களாக பெய்து வரும் சாரல் மழையால் மானாவாரி நிலங்களில், நிலக்கடலை, துவரை, உளுந்து உள்ளிட்ட சிறுதானிய பயிர்கள் விதைப்பு பணிகளை, விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். இதற்கும், ஏர் ஓட்ட எருது மாடுகள் தேவைப்படுதால், வழக்கத்துக்கு மாறாக, இந்த வார சந்தையில், ஏர் ஓட்டும் எருது மாடுகளின் விற்பனை அதிகரித்துள்ளது. மேலும், மழை பெய்துள்ளதால், நிலங்களில் மேய்ச்சலுக்கு புல் முளைக்கும் என்பதால், கறவை மாடுகளையும் அதிகம் பேர் வாங்கி செல்கின்றனர். இனி,வரும் நாட்களில் மழை தொடர்ந்தால், கால்நடை விற்பனை மேலும் அதிகரிக்கும், என்றார்.

## <u>ரூ.15.50 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்</u>

**கோபிசெட்டிபாளையம்:** கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த ஏலத்தில், 325 தேங்காய் பருப்பு மூட்டைகள், 15.50 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

கோபி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வியாழக்கிழமை தோறும், கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. அதன்படி, ஈரோடு மாவட்டம் மற்றும் அதன் சுற்றுப்பகுதியில் இருந்து, 81 விவசாயிகள், கொப்பரை தேங்காயை ஏலத்துக்கு கொண்டு வந்திருந்தனர். ஒரு கிலோ கொப்பரை தேங்காய் பருப்பு, 93.93 முதல், 100.69 ரூபாய்க்கு விலை போனது. மொத்தம், 325 மூட்டைகள், 15.50 லட்சம்

ரூபாய்க்கு ஏலம் போனது, என , கோபி ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகேந்திரசிங் தெரிவித்தார்.

**வேளாண் உ.இயக்குனர் பொறுப்பேற்பு**

**கோபிசெட்டிபாளையம்:** நம்பியூர் வட்டார வேளாண் உதவி இயக்குனராக இருந்த சுந்தரராஜன், தாளவாடிக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.
அவருக்கு பதிலாக, சென்னிமலை வட்டார வேளாண்மை துறை உதவி இயக்குனராக இருந்த ஆசைத்தம்பி, நேற்று முதல் பொறுப்பேற்று கொண்டார்.
வேளாண்மை துறை இயக்குனர் ராஜேந்திரன், இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

**இலவச மரக்கன்றுகள் வனத்துறை புதிய திட்டம்**

**ஈரோடு:** மரக்கன்றுகளை பராமரிக்க விருப்பம் உள்ள தொழில் நிறுவனங்கள் நாற்றுகளை, இலவசமாக பெற்று கொள்ள வனத்துறை அழைப்பு விடுத்துள்ளது. உலக வெப்பமயமாதலால் ஏற்பட கூடிய இன்னல்களை தணிக்கும் விதமாக, வனங்களுக்கு வெளியே உள்ள பகுதிகளில் மரங்களை நட்டு வளர்க்கவும், இதனால் பசுமை பரப்பை அதிகப்படுத்தி சுத்தமான காற்று, வெப்பம் குறைப்பு, மழை நீர் சுழற்சி, பல் உயிரின ஆதாரம், நன் நிழல், அழகு மலர்கள், தடி மரங்கள் போன்ற பலன்களை மக்கள் பெறும் வண்ணம், தமிழகம் முழுவதும், 2013-14ம் ஆண்டில் பெருந்திரள் மரக்கன்றுகள் நடும் திட்டம் உருவாக்கப்பட்டது.இதில், வனத்துறை மூலம், 66 லட்சம் மரக்கன்றுகள் நட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இம்மாவட்டத்தில் வனங்களுக்கு வெளியே, பசுமை பரப்பை அதிகப்படுத்தும் வகையில், 2,06,250 மரக்கன்றுகள் நடவு செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
பிப்., 24ம் தேதி முதல் நடவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.அரசு வளாகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், தனியார் நிறுவன வளாகங்கள், தொழில் நிறுவன வளாகங்களில் குறைந்த பட்சம், 50 செடிகள் நடவு செய்து பராமரிக்க

விருப்பம் உள்ளவர்களுக்கு, நாற்றுகளை இலவசமாக வழங்கி நடவு செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட வன அலுவலகங்களை தொடர்பு கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

**<u>கற்பூர மரங்களை அகற்ற வலியுறுத்தல்</u>**

**ஊட்டி :** நீலகிரி மாவட்டத்தில் வாழும் தோடர் இன மக்களின் நலன் காக்கும் வகையில்,"தோடர்கள் முன்னேற்றப் பேரவை' என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. இதில், தோடர் சமுதாய தலைவரை தேர்ந்தெடுக்கும் நிகழ்ச்சி, ஊட்டியில் நேற்று நடந்தது. இதில், தோடர் சமுதாய தலைவராக மன்தேஷ் குட்டன், தேர்வு செய்யப்பட்டார். துணைத் தலைவர் களாக ராஜன், ஜெய்மாராஜ், பில்லியாகுட்டன், பொதுச் செயலராக சத்யராஜ், இணை செயலராக குமரேஷ், பொருளாளராக மீன்ராஜ், துணை பொருளாளராக ஏசரி குட்டன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தோடர் சமுதாய தலைவர் மன்தேஷ் குட்டன் கூறுகையில், ""நீலகிரி மாவட்டத்தில் தோடர் இன கிராமங்களில், நீர் வளம் தரும் புல்வெளிப் பகுதிகளில், நிலத்தடி நீரை உறிஞ்சும், கற்பூர மரங்கள் அதிகளவில் உள்ளன. அவற்றை அப்புறப்படுத்தி, புல்வெளிகளை வளர்க்க, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்பட சில அடிப்படை கோரிக்கைகள் உள்ளன. அவற்றை நிறைவேற்றி கொடுக்க முயற்சி எடுப்பேன்," என்றார்.

**<u>கறவை மாடு வாங்க கடன்</u>**

**ஊட்டி :** கூட்டுறவு கடன் சங்கம் சார்பில், 8 லட்சம் ரூபாய் மதிப்பில் கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கப்பட்டது. கேத்தி சரஸ்வதி தொடக்க வேளாண்மை கடன் சங்க தலைவராக டாக்டர் பெலோனி கிருஷ்ணன், பொறுப்பேற்றார். நிகழ்ச்சியில், சங்க உறுப்பினர்கள் 11 பேருக்கு, 8.80 லட்சம் ரூபாய் மதிப்பில், கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில், மாவட்ட மத்திய

கூட்டுறவு வங்கி தலைவர் பெள்ளி, நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் கண்ணபிரான் உட்பட பலர் பங்கேற்றனர்.

## வெங்காயத்தில் இலைப்பேன் கட்டுப்படுத்த யோசனை

**குளித்தலை:** தோகைமலை பகுதியில், விவசாயிகள் சாகுபடி செய்துள்ள வெங்காய பயிரில் இலைப்பேன் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம், என தோட்டக்கலை துறை தெரிவித்துள்ளது.

தோகைமலை தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜேந்திரன், தெரிவித்ததாவது:கரூர் மாவட்டம், தோகைமலை பகுதியில், விவசாயிகள் நடவு செய்துள்ள வெங்காய பயிரில் இலைப்பேன், வெங்காய ஈ , வெட்டுப்புழு தாக்குதல் காணப்படுகிறது. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து, அவற்றை கட்டுப்படுத்த வேண்டும்.இலைப்பேன் பூச்சிகள், வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்படும். பூச்சிகள் இலைகளை சுரண்டி சாறை உறிஞ்சும். இலைகள் வெண்திட்டுகளாக காணப்படும். இலைகள் நுனியிலிருந்து வாடும்.

இதனைக் கட்டுப்படுத்த, ஏக்கருக்கு, 200 மில்லி மிதைல்டெமெட்டான் அல்லது, 125 மில்லி பாஸ்போமிடான் அல்லது புரபினோபாஸ், 2 மில்லி மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து, தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.வெங்காய ஈ , சாம்பல் நிற ஈக்கள் மண்ணில் உள்ள இடுக்குகளில் முட்டையிடும். அவற்றில் இருந்து வரும் சிறிய வெண்ணிற புழுக்கள், நிலத்தடியில் உள்ள தண்டுப்பகுதி மற்றும் வெங்காயத்தை குடைந்து தின்று அழுகச்செய்யும். கட்டுப்படுத்த மிதைல்டெமெட்டான், 25 இ.சி., ஒ ரு மில்லி மருந்தை, ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வெண்டும். மானோகுரோட்டொபாஸ், ஒரு மில்லி மருந்துடன் டீப்பால், 0.5 மில்லியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வெண்டும்.வெட்டுப்புழு இலைகளை அரித்து, சல்லடை போல் துளைக்கும். வளர்ந்த புழுக்கள் வெங்காயத் தாள்களை சேதப்படுத்தும். அவற்றை கட்டுப்படுத்த குளோர்பைரி பாஸ்

மருந்தினை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு, இரண்டு மில்லி வீதம் கலந்து மண்ணில் ஊற்ற வேண்டும். வரப்பு ஓரங்களில், ஆமணக்கை கவர்ச்சி பயிராக பயிரிட்டு, அதில் காணப்படும் சந்தனப்பொட்டு போன்ற முட்டைக்குவியல்களையும், கூட்டமாகக் காணப்படும் இளம் புழுக்களையும் சேகரித்து அழிக்க வேண்டும்.வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இலைப்பேன், வெங்காய ஈ , வெட்டுப்புழு தாக்குதல் கட்டுப்படுத்த, தக்க பயிர் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து அதிக மகசூல் பெறலாம்.
இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**<u>சாம்பல்நிற அணில்கள் சரணாலயத்தில் 26 கி.மீ., தூரத்திற்கு யானை தடுப்பு அகழி</u>**

**ஸ்ரீவில்லிபுத்தூர் :** ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில்கள் சரணலாய பகுதியில், வனவிலங்குகள் விளைநிலங்களுக்குள் வராமல் தடுக்க, 26 கி.மீ.,தூரத்திற்கு யானை தடுப்பு அகழி வெட்டபட்டு வருகிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில்கள் சரணலாய பகுதியான ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, மதுரை மாவட்டம் சாப்டூர் வனப்பகுதியில், ஏராளமான வனவிலங்குகள் உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக சரி வர மழை பெய்யாததால் யானைகள், காட்டு மாடு, மான்கள் தண்ணீருக்காகவும், உணவிற்காகவும் வனத்தை விட்டு வெளியேறுகிறது. இவ்வாறு வரும் விலங்குகள் தனியார் நிலங்களில் புகுந்து பயிர்களை சேதப்படுத்துவதோடு, தண்ணீர் குழாய்களையும் சேதப்படுத்திவருகிறது. விவசாயிகள் கடுமையாக பாதிக்கின்றனர். இவ்வாறு வரும் விலங்குகள் தனியாரின் கிணறுகள், வாகனங்களில் அடிப்பட்டு உயிரிழக்கும் அபாயமும் ஏற்பட்டு வருகிறது. இதை தடுக்க சரணலாய பகுதிகளில் 26 கி.மீ., தூரத்திற்கு யானை தடுப்பு அகழிகள் வெட்டப்பட்டுள்ளன. மேலும் பல பகுதிகளில், இந்தாண்டு முதல் யானை தடுப்பு அகழிகள் வெட்ட வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.மாவட்ட வன பாதுகாவலர் அசோக்குமார்,"" வன விலங்குகள் வனத்தை விட்டு வெளியேறுவதை தடுக்க 26 கி.மீ.,தூரத்திற்கு

சரணலாய பகுதியில் யானை தடுப்பு அகழிகள் வெட்டப்பட்டுள்ளன. மேலும் இந்தாண்டு 15 கி.மீ.,தூரத்திற்கு அகழிகள் வெட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது," என்றார்.

**<u>மழைநீர் சேகரிப்பு ஊர்வலம்</u>**

**சிவகாசி:** சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில், மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. ஒன்றிய தலைவர் சுப்பிரமணியன் துவக்கி வைத்தார்.

ஒன்றிய ஆணையாளர் சுப்பாராமன், வட்டார வளர்ச்சி அலுவலர் வெள்ளைச்சாமி முன்னிலை வகித்தனர். ஊராட்சி செயலர்கள், ஓன்றிய அலுவலர்கள் மழைநீர் சேகரிப்பை வலியுறுத்தி மோட்டார் சைக்களில் பாதைகள் ஏந்தி, துண்டு பிரசுரங்கள் வினியோகித்துவாறு சென்றனர். சிவகாசி ஒன்றிய அலுவலகத்தில் துவங்கி, ஆணையூர், செங்கமலநாச்சியார்புரம், கட்டளைப்பட்டி, வெள்ளையாபுரம், நமஸ்கரித்தான்பட்டி வழியாக எம்.புதுப்பட்டி சென்றடைந்தனர். கிராம ஊராட்சி பகுதிகளில் இம் மாதம் 31ம்தேதிக்குள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்திட வலியுறுத்தினர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கம்மாபுரம் பகுதியில் மல்லிகைப்பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம்</u>**

கம்மாபுரம் பகுதியில் மல்லிகைப்பூ சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மல்லிகைப்பூ

கம்மாபுரம், சிறுவரப்பூர், கோட்டுமுளை, பெருந்துரை, ஓட்டிமேடு, சேப்ளாநத்தம், மணக்கொல்லை, இருளக்குறிச்சி ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் பயிர் சுழற்சி முறையில் விவசாயம் செய்து வருகின்றனர். தோட்டக்கலை துறை பயிர்களான மலர் வகை, காய்கறிவகை, எண்ணெய்வித்து பயிர்கள், பயறு வகை பயிர்கள், தானிய பயிர்கள் என  பயிர்சுழற்சி முறையை பயன்படுத்தி விவசாயிகள் அதிக மகசூலையும் பெற்று பயனடைந்து வருகின்றன.

கம்மாபுரம் பகுதிகளில் மணிமுக்தாநதியும், வெள்ளாறும் வண்டல் மண்ணை படிய வைத்து செல்வதால் இப்பகுதி விவசாயிகள் தோட்டக்கலைத்துறை பயிர் செய்வதில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேற்கூறிய கிராமங்களில் வண்டல் கலந்த கரிசல் மண் காணப்படுவதால் இந்த மண்ணிற்கு ஏற்ற மல்லிகை மலர் சாகுபடியில் ஆர்வம் காட்ட தொடங்கியுள்ளனர்.

மகசூல், வருமானம்

மல்லிகை பயிர்செய்வது குறித்து தெற்கு சேப்ளாநத்தம் விவசாயி கணபதி என்பவர் கூறுகையில்,

ஒரு முறை மல்லிகைப்பூ பயிரை சாகுபடி செய்தால் சுமார் 10 வருடங்கள் வரை மாற்று பயிர் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. சாகுபடி செலவுகள் மிக மிகக்குறைவு. கடுமையான வெயில் நேரங்களில் மட்டும் தண்ணீர் பாசனம் செய்தால் போதும்.

தோட்டக்கலைத்துறை அதிகாரிகளின் பரிந்துரையில் நோய் கட்டுப்பாட்டு முறைகள், மலரை பராமரிக்கும் முறைகளை தெரிவிப்பதால், மலரில் அதிக மகசூல் கிடைப்பதுடன் தினந்தோறும் வருமானம் கிடைத்து வருகிறது. இங்கிருந்து, சென்னை, பெங்களூர் போன்ற பெருநகரங்களுக்கு மல்லிகைப்பூ அனுப்பி வைத்தால் திருவிழாக்காலங்களுக்கு ஏற்றார் போல கிலோவுக்கு ரூ.300 லிருந்து 600 வரை கிடைக்கிறது. உள்ளூர் பூ வியாபாரிகளும் கிலோ ரூ.150 லிருந்து 200 வரை நேரடியாக வந்து வாங்கி செல்கின்றனர். இப்பகுதிகளில் மல்லி போன்ற மலர்கள் அதிகம் பயிர்செய்யப்படுவதனால் வாசனை சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கப்பட்டால் இப்பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரும். வேலையில்லா பலருக்கு வேலையும் கிடைக்கும் என்றார். நல்ல ம கசூலும், அதிக லாபமும் கிடைப்பதால் ஏராளமான விவசாயிகள் மல்லிகை பூ சாகுபடிசெய்து வருகின்றனர்.

## சிறுத்தைப்புலிகளை பிடிக்க ஏற்பாடு வண்டலூர் அருகே கூண்டு, கேமரா அமைப்பு

**செங்கல்பட்டு:**

வண்டலூர் அருகே சிறுத்தைப்புலிகளை பிடிக்க கூண்டு மற்றும் கண்காணிப்பு கேமராக்களை வனத்துறையினர் அமைத்தனர்.

சிறுத்தைப்புலி

காஞ்சீபுரம் மாவட்டம் வண்டலூரை அடுத்த ஊனமாஞ்சேரி, காரணைப்புதுச்சேரி, அருங்கால் மற்றும் பெருமாட்டுநல்லூர் கிராமங்களுக்கு இடையே அரசு காப்புக்காடு உள்ளது. இந்த காட்டில் மான்கள் சுற்றி திரிவது வழக்கம். இதில் உள்ள மான்கள் தண்ணீர் தேடி அந்த பகுதியில் உள்ள வீடுகளில் வைக்கப்பட்டிருக்கும் குடிநீரை குடித்துவிட்டு செல்லும்.

இந்த நிலையில் காரணைப்புதுச்சேரி, சங்கோதியம்மன் கோவில் தெருவை

சேர்ந்தவர்கள் அந்த பகுதியில் சிறுத்தைப்புலியின் நடமாட்டம் இருப்பதாக தெரிவித்தனர்.

கண்காணிப்பு கேமரா

அருங்கால் கிராமத்தில் உள்ள காப்புக்காடு அருகில் உள்ள மாந்தோப்பில் தங்கியிருந்த மானை 2 சிறுத்தைப்புலிகள் இழுத்து சென்றதற்கான அடையாளம் இருப்பதாகவும் அந்த பகுதியை சேர்ந்தவர்கள் வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து வனத்துறையினர் சிறுத்தைப்புலிகளை பிடிக்க கூண்டு மற்றும் கண்காணிப்பு கேமரா அமைத்தனர்.

இது போல கடந்த மாதம் செங்கல்பட்டு மற்றும் நெடுங்குன்றத்தை அடுத்த சதானந்தபுரம், ஆலப்பாக்கம், அஞ்சூர் காட்டுப்பகுதியில் சிறுத்தைப்புலி நடமாடுவதை உறுதி செய்த வனத்துறையினர் அங்கு கூண்டுகள் மற்றும் கண்காணிப்பு கேமராக்களை அமைத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் அஞ்சூர் காட்டுப்பகுதியில் கூண்டு மற்றும் கண்காணிப்பு கேமரா வைக்கப்பட்டது. சிறுத்தைப்புலி நடமாட்டம் காரணமாக அந்த பகுதியை சேர்ந்தவர்கள் அச்சத்தில் உள்ளனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெங்காயம் இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு

வெங்காயம் விலையை கட்டுப் படுத்த, அதை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி

செய்ய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான முடிவு இந்த வாரம் எடுக்கப்படும் எனவும் பாகிஸ்தான், சீனா, மலேசியா, ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து வெங்காயம் இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகளை ஆராயுமாறும் பொதுத் துறை நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப் படும் என மத்திய அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து அதிகாரிகள் கூறும் போது, " டெல்லியில் உள்ள முக்கிய மண்டிகளில் வெங்காயம் மொத்த விற்பனை விலை ரூ.30-க்கு மேல் உயரும் அறிகுறிகள் காணப்படுகின்றன. இதனால் சில்லறை விற்பனை அங்காடிகளில் இதன் விலை மேலும் அதிகரிக்கும். டெல்லியில் உள்ள லாசல் காவ்ன், பிம்பல்காவ்ன் ஆகிய 2 முக்கிய மண்டிகளில் வெங்காயத் தின் அன்றாட வரத்து இந்த மாதம் தொடர்ந்து குறைந்து வருகிறது. பிம்பல்காவ்ன் மண்டியில் இந்த பாதிப்பு அதிகமாக உள்ளது. உள்நாட்டு சப்ளையில் மாற்றம் ஏற்படாவிடில், வெங்காயம் பதுக்கி வைக்கப்படவும், அதன் விலை மேலும் உயரவும் வாய்ப்புள்ளது. எனவே இறக்குமதி அவசியமாகிறது" என்றனர்.

**ஒரு அணையின் கதை**

தமிழகம்,கேரளா இடையே உரிமைப் போராட்டத்தை ஏற்படுத்திய ஒரு விஷயம் முல்லைப் பெரியாறு அணை. தேனி, மதுரை, சிவகங்கை, திண்டுக்கல், ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் இந்த முல்லை பெரியாறு அணைக்குப் பின்னணியில் ஒரு பெரும் தியாகம் ஒளிந்திருக்கிறது. பல சர்ச்சைகளுக்கு இடையே தென் தமிழக மக்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கும் முல்லைப் பெரியாறு அணையைப் பற்றியும், இந்த அணையைக் கட்டிய பென்னிகுயிக்கின் தியாகத்தையும் எழுத்துருவில் தாங்கி வந்திருக்கும் நூல்தான் ஜி. விஜயபத்மா எழுதியுள்ள ' முல்லை பெரியாறு -

அணை பிறந்த கதை’ .

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தீட்டப்பட்ட திட்டம் என்பதால், வெள்ளையர்கள் இந்தியாவுக்கு வர முயற்சி மேற்கொண்டதிலிருந்து அணையின் கதை தொடங்குகிறது. தமிழக அரசின் தலைமைச் செயலகமாக உள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டை எப்படி உருவானது, எதற்காக உருவாக்கினார்கள், ராபர்ட் கிளைவின் சாசசங்கள் என கறுப்பு வெள்ளைக் காலத்தைப் பற்றி நூலில் ஏராளமான தகவல்கள் கொட்டிக் கிடக்கின்றன. மெட்ராஸ் மாகாணத்தில் ஏற்பட்ட தாது வருடப் பஞ்சம் பற்றி ஆதாரத்துடன் நூல் ஆசிரியர் விளக்கியிருக்கிறார்.

பஞ்சத்தைப் போக்கும் விதமாக நீர் மேலாண்மையை விஸ்தரிக்க ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட முயற்சி, அதன் ஒரு பகுதியாக முல்லைப் பெரியாறு அணை கட்ட எடுக்கப்பட்ட முயற்சிகள், திருவாங்கூர் சமஸ்தானத்துடன் 999 ஆண்டுகளுக்குப் போட்டப்பட்ட ஒப்பந்தம், அணை கட்டும்போது ஏற்பட்ட சிரமங்கள், உயிரிழப்புகள், உடைமை இழப்புகள் குறித்து தகவல்கள் உள்ளன.

இறுதியாக பென்னி குயிக் என்ற ஆங்கிலேயப் பொறியாளரின் கடும் முயற்சியும், அதற்காக அவர் மெனக்கெட்டதையும் படிக்கும்போது சிலிர்ப்பு ஏற்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையில் உருவாகி அரபிக் கடலில் வீணாகக் கலக்கும் பெரியாறு நீரைப் பயன்படுத்த அணை கட்டித் தென் தமிழக மக்களின் வயிற்றில் நீர் வார்த்த பென்னி குயிக்கின் தியாகத்தை எல்லோருமே அறிந்து கொள்ள வேண்டும்.